©
GOVERNMENT OF TAMIL NADU
2012

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[Price: Rs. 17.60 Paise.

# தமிழ்நாடு அரசிதழ்

## சிறப்பு வெளியீடு

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

No. 305A] சென்னை, வெள்ளிக்கிழமை, நவம்பர் 2, 2012
ஐப்பசி 17, திருவள்ளுவர் ஆண்டு - 2043

## பகுதி IV—பிரிவு 1

### தமிழ்நாடு சட்டமுன்வடிவுகள்

பொருளடக்கம்

| சட்டமுன்வடிவுகள் : | *பக்கங்கள்* |
| --- | --- |
| எண் 42/2012—சென்னை மாநகரக் காவல் (திருத்தச்) சட்டம் .. .. | 2–3 |
| எண் 43/2012— சென்னை மாநகரக் காவல் (திருப்பூர் மாநகரத்திற்கு செயற்பாடு நீட்டிப்பு) சட்டம் - - - | 5–13 |
| எண் 44/2012—தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டம் - | 15–16 |
| எண் 45/2012—தமிழ்நாடு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்தச்) சட்டம் .. | 17–20 |
| எண் 46/2012—தமிழ்நாடு நகர்–ஊரமைப்பு (திருத்தச்) சட்டம் .. .. | 21–25 |
| எண் 47/2012—அண்ணாமலைப் பல்கலைக் கழக (திருத்தச்) சட்டம் .. | 27–28 |
| எண் 48/2012—தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (மூன்றாம் திருத்தச்) சட்டம் .. | 29–30 |
| எண் 49/2012—தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (நான்காம் திருத்தச்) சட்டம்.. | 31–34 |
| எண் 50/2012—தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (ஐந்தாம் திருத்தச்) சட்டம் .. | 35–36 |
| எண் 51/2012—தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக (இரண்டாம் திருத்தச்) சட்டம் .. .. | 37–38 |
| எண் 52/2012—தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டம்.. .. | 39–40 |
| எண் 53/2012—தமிழ்ப் பல்கலைக்கழகத் (திருத்தச்) சட்டம்.. .. .. | 41–42 |
| எண் 54/2012—தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகம் சென்னை (திருத்தச்) சட்டம் .. .. | 43–44 |

**2012 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 1 ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க—காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130—ஆம் விதியின்கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.**

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 42/2012.**

**1888 ஆம் ஆண்டு சென்னை மாநகரக் காவல் சட்டத்தினை மேலும் திருத்துவதற்கானதொரு சட்டமுன்வடிவு.**

இந்தியக் குடியரசின் அறுபத்து மூன்றாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப்பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:-

குறுந்தலைப்பும் தொடக்கமும்.

**1.** (1) இந்தச் சட்டம், 2012—ஆம் ஆண்டு சென்னை மாநகரக் காவல் (திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது, 2012 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 7 ஆம் நாளன்று நடைமுறைக்கு வந்துவிட்டிருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

41—A எனும் பிரிவிற்கான திருத்தம்.

**2.** 1888 ஆம் ஆண்டு சென்னை மாநகரக் காவல் சட்டத்தின் 41—A எனும் பிரிவில்,— தமிழ்நாடு சட்டம் III/1888.

(1) ஓரத்தலைப்பிற்குப் பதிலாக, பின்வரும் ஓரத்தலைப்பானது அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:-

''பயிற்சி செய்வதை, திறன்பயிற்சி செய்வதை அல்லது கூட்டம் கூடுவதைத் தடைசெய்வதற்கான அதிகாரம்.'';

(2) (1) ஆம் உட்பிரிவின், (a) எனும் கூறில், ''பொது இடமோ அல்லது தனி இடமோவான இடம் எதிலும், ஐந்து அல்லது அதற்கு மேற்பட்ட நபர்கள் ஆயுதங்களுடன் கூடிய பயிற்சி அல்லது ஆயுதங்களுடன் கூடிய திறன் பயிற்சி எதனையும் நடத்துவதை அல்லது அதில் பங்கெடுத்துக்கொள்வதை அல்லது ஆயுதங்களை ஊர்வலத்தில் கொண்டு செல்வதைத் தடைசெய்தல்.'', எனும் சொற்றொடருக்குப் பதிலாக, ''பொது இடம் ஒன்றிலோ அல்லது தனி இடம் ஒன்றிலோ ஆயுதங்களுடன் கூடிய அல்லது மத்திய அரசின் ஆயுதப்படையினர் அல்லது காவல் படையினர் போன்ற சீருடையில் பயிற்சி, திறன்பயிற்சி அல்லது கூட்டம் எதையும் நடத்துவதை அல்லது அதில் பங்கெடுத்துக்கொள்வதைத் தடை செய்தல்.'', என்னும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்;

(3) (4) ஆம் உட்பிரிவில், (ii) எனும் கூறுக்குப் பதிலாக பின்வரும் கூறானது அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:-

''(ii) ஆயுதங்களுடன் கூடிய அல்லது மத்திய அரசின் ஆயுதப்படையினர் அல்லது காவல் படையினர் போன்ற சீருடையில் பயிற்சி, திறன் பயிற்சி அல்லது கூட்டம் நீங்கலாக பிற உடற்பயிற்சி எதனையும் செய்தல்.'';

(4) விளக்கத்திற்குப் பதிலாக, பின்வரும் விளக்கமானது அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:-

''விளக்கம்.— இந்தப்பிரிவின் நோக்கத்திற்காக,—

(*a*) 'கூட்டம்' என்னும் சொல்லானது பொது மக்களுக்கு அல்லது பொது மக்களின் பிரிவினர் அல்லது பகுதியினர் எவருக்கும் பொதுவான நிலையிலான கூட்டம் எதனையும் உள்ளடக்கும்;

(*b*) 'ஆயுதங்கள்' என்னும் சொல்லானது தாக்குவதற்கான ஆயுதம் எதுவும் என்று பொருள்படும்; அதில் கழி மற்றும் கம்பு உள்ளடங்கும்.

நீக்கமும் காப்பும்.

**3.** (1) 2012 ஆம் ஆண்டு சென்னை மாநகரக் காவல் (திருத்த) அவசரச் சட்டமானது இதன் மூலம் நீக்கம் செய்யப்படுகிறது. தமிழ்நாடுஅவசரச் சட்டம் 16/2012.

(2) அவ்வாறு நீக்கம் செய்யப்பட்டிருக்கின்றபோதிலும், மேற்சொன்ன அவசரச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டத்தின்படி செய்யப்பட்ட செயல் எதுவுமோ, அல்லது எடுக்கப்பட்ட நடவடிக்கை எதுவுமோ, இந்தச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டத்தின்படி செய்யப்பட்டதாகவோ அல்லது எடுக்கப்பட்டதாகவோ கொள்ளப்படுதல் வேண்டும்.

**நோக்க–காரண விளக்கவுரை.**

1888 ஆம் ஆண்டு சென்னை மாநகரக் காவல் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் III/1888) 41–A எனும் பிரிவிற்கு இணங்கிய வகையில், காவல்துறை ஆணையரானவர் பொது அமைதியைக் காப்பதற்காக அல்லது பொதுமக்கள் பாதுகாப்பிற்காக அல்லது பொது ஒழுங்கைப் பேணிவருவதற்காக, எழுத்துருவிலான ஆணையின் வாயிலாக, பொது இடமோ அல்லது தனி இடமோவான இடம் எதிலும் ஐந்து அல்லது அதற்கு மேற்பட்ட நபர்கள் ஆயுதங்களுடன் கூடிய பயிற்சி எதனையும் நடத்துவதை அல்லது அதில் பங்கெடுத்துக்கொள்வதை அல்லது ஊர்வலம் எதிலும் ஆயுதங்கள் எவற்றையும் கொண்டு செல்வதைத் தடைசெய்யலாம்.

2. மத்திய அரசின் ஆயுதப்படையினர் அல்லது காவல் படையினரின் சீருடையைப் போன்ற வகையில் உடையணிந்த தன்னார்வலர்களைக் கொண்டு அணிவகுப்புகளை நடத்தும் முயற்சிகள் நடைபெறுகின்றன எனவும், அத்தகைய அணி வகுப்புகள் அதில் பங்கெடுத்துக்கொள்பவர்களுக்கு போராட்டத் தோற்றமொன்றை அளிக்கும் எனவும், அத்தகைய நிகழ்வுகள் சுற்றுச் சூழலைக் கெடுக்கும் எனவும், சமுதாயத்தில் நிலவும் இணக்க நிலையைப் பாதிக்கும் எனவும் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. எனவே அரசானது, ஆயுதங்களுடன் கூடிய அல்லது மத்திய அரசின் ஆயுதப்படையினர் அல்லது காவல் படையினர் போன்ற சீருடையில் பயிற்சி செய்வதை அல்லது திறன் பயிற்சி செய்வதை அல்லது கூட்டம் கூடுவதைத் தடைசெய்வதற்குக் காவல்துறை ஆணையருக்கு அதிகாரம் அளிக்கும் வகையில் III/1888 எனும் எண்ணிட்ட தமிழ்நாடு சட்டத்தின் 41–A எனும் மேற்சொன்ன பிரிவைத் தக்கவாறு திருத்துவதென முடிவு செய்தது. அதற்கிணங்கிய வகையில், 2012 ஆம் ஆண்டு சென்னை மாநகரக் காவல் (திருத்த) அவசரச் சட்டமானது (தமிழ்நாடு அவசரச் சட்டம் 16/2012) 2012 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 1–ஆம் நாளன்று ஆளுநரால் பிறப்பிக்கப்பட்டு அது, 2012 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 7ஆம் தேதியிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** சிறப்பிதழில் வெளியிடப்பட்டது.

3. இந்தச் சட்டமுன்வடிவு மேற்சொன்ன அவசரச் சட்டத்திற்குப் பதிலாக அமைய விழைகிறது.

**ஜெ ஜெயலலிதா,**
*முதலமைச்சர்.*

அ.மு.பி. ஜமாலுதீன்,
*செயலாளர்.*

**2012 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 1 ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க—காரண விளக்கவுரையுடன் சேர்ந்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130 ஆம் விதியின் கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.**

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 43/2012.**

**1888-ஆம் ஆண்டு சென்னை மாநகரக் காவல் சட்டத்தின் வகைமுறைகளை திருப்பூர் மாநகருக்கு நீட்டிப்பதற்கானதொரு சட்டமுன்வடிவு**

இந்தியக்குடியரசின் அறுபத்து மூன்றாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

குறுந்தலைப்பும் தொடக்கமும்.

**1.** (1) இந்தச் சட்டம், 2012—ஆம் ஆண்டு சென்னை மாநகரக் காவல் (திருப்பூர் மாநகரத்திற்கு செயற்பாடு நீட்டிப்பு) சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது, 2012 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 8—ஆம் நாளன்று நடைமுறைக்கு வந்துவிட்டிருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்

பொருள் வரையறைகள்.

**2.** இந்தச் சட்டத்தில் தறுவாய் வேறு பொருள் குறித்தாலன்றி,

(1) "குறிக்கப்பட்ட நாள்" என்றால் 2012 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 8—ஆம் நாள் எனப் பொருள்படும்.

தமிழ்நாடு சட்டம் 7/2008.

(2) "திருப்பூர் மாநகரம்" என்றால் 2008 ஆம் ஆண்டு திருப்பூர் மாநகராட்சிச் சட்டத்தின் 2—ஆம் பிரிவின், (a) எனும் கூறில் வரையறை செய்யப்பட்டவாறான திருப்பூர் மாநகரம் எனப் பொருள்படும்.

தமிழ்நாடு சட்டம் III/1888.

(3) "மாநகரக் காவல் சட்டம்" என்றால் 1888—ஆம் ஆண்டு சென்னை மாநகரக் காவல் சட்டம் எனப் பொருள்படும்.

(4) "அரசு" என்றால் மாநில அரசு எனப் பொருள்படும்.

(5) "நடைமுறையிலுள்ள சட்டம்" என்பது தமிழ் நாடு மாநிலம் முழுவதிலுமோ அல்லது அதன் பகுதி எதிலுமோ நடைமுறையில் இருக்கிற செய் சட்டத்தை, அவசரச் சட்டத்தை, ஒழுங்குமுறை விதியை, அறிவிக்கையையோ அல்லது தமிழ்நாடு மாநிலம் முழுவதிலுமோ அல்லது அதன் பகுதி எதிலுமோ சட்டத்தின் ஆற்றல் பெற்றிருக்கிற முறையாவணம் எதனையுமே உள்ளடக்கும்.

III/1888 எண்ணிட்ட தமிழ்நாடு சட்டத்தை நீட்டித்தல்.

**3.** (1) குறிக்கப்பட்ட நாளுக்கு உடனடி முன்னதாக நடைமுறையில் இருந்தவாறான மாநகரக் காவல் சட்டமானது குறிக்கப்பட்ட நாளன்றும் அது முதற்கொண்டும் செயல் விளைவு கொள்ளும் வகையில் திருப்பூர் மாநகரத்திற்கு செயற்பாடு நீட்டிக்கப்பட்டு நடைமுறையில் இருந்து வருதல் வேண்டும்.

(2) திருப்பூர் மாநகரத்திற்கு நீட்டிக்கப்பட்டவாறான மாநகரக் காவல் சட்டத்தில்:-

(*a*) 3—ஆம் பிரிவில் குறிப்பிடப்படுகின்றவையல்லாத பிறவாறான சென்னை மாநகரத்திற்கான சுட்டுகை எதுவும், இந்தச் சட்டத்தின் காரணமாக திருப்பூர் மாநகரத்திற்கான ஒரு சுட்டுகையாகப் பொருள் கொள்ளப்படுதல் வேண்டும்.

(*b*) மாநகரக் குற்றவியல் நடுவர் என்ற குறிப்பிடப்படுகின்ற சுட்டுகை எதுவும் இந்தச் சட்டத்தின் காரணமாக நீதித்துறை, குற்றவியல் நடுவர் என்று குறிப்பிடப்படும் ஒரு சுட்டுகையாகப் பொருள்கொள்ளப்படுதல் வேண்டும்.

(*c*) ஆணையர் எனக் குறிப்பிடப்படும் சுட்டுகை எதுவும் இந்தச் சட்டத்தின் காரணமாக திருப்பூர் மாநகரக் காவல் நிருவாகம் உற்றடைந்துள்ள திருப்பூர் மாநகரத்தின் காவல் துறை ஆணையர் என்று குறிப்பிடப்படும் சுட்டுகையாகப் பொருள்கொள்ளப்படுதல் வேண்டும்.

மாவட்ட குற்றவியல் நடுவர்கள் மற்றும் நிர்வாகத் துறை குற்றவியல் நடுவர்கள் ஆகியோர்களின் 1973–ஆம் ஆண்டு குற்ற வழக்கு விசாரணை முறை தொகுப்புச் சட்டத்தின் படியான அதிகாரத்தைச் செலுத்தி வருவதற்கு திருப்பூர் மாநகரத்தின் ஒரு சில பிற காவல் அலுவலர் களுக்கும் அதிகாரம் அளிப்பதற்கு அரசுக்கு உள்ள அதிகாரம்.

**4.** (1) மாநகரக் காவல் சட்டத்தின் 7–ஆம் பிரிவில் அடங்கியயுள்ள வகைமுறைகளுக்குப் பாதகமின்றி அரசானது, அறிவிக்கை வாயிலாகவும் மற்றும் அதில் குறித்துரைக்கப்படக்கூடிய நிபந்தனைகளுக்கும் வரம்புக்கும் உட்பட்டும்:–

(*a*) அந்த அறிவிக்கையில் குறித்துரைக்கபடக்கூடியவாறு, (இதன் பின்பு இந்தப் பிரிவில் மேற்சொன்ன தொகுப்புச் சட்டம் எனக் குறிப்பிடப்படுவதான) 1973–ஆம் ஆண்டு குற்ற வழக்கு விசாரணை முறைத் தொகுப்புச் சட்டத்தின் அத்தகைய வகைமுறைகளின்படியான அல்லது எந்தப் பொருட்பாடுகளைப் பொறுத்து மாநிலச் சட்டமன்றம் மாநிலத்திற்காக சட்டமியற்ற அதிகாரம் பெற்றிருக்கின்றதோ அந்தப் பொருட்பாடுகள் தொடர்பாக நடைமுறையில் உள்ள வேறு சட்டம் எதனின் வகைமுறைகளின்படியான நிருவாகத்துறை குற்றவியல் நடுவர் ஒருவரின் மற்றும் மாவட்ட குற்றவியல் நடுவர் ஒருவரின் அதிகாரங்களையும் கடமைகளையும், திருப்பூர் மாநகரம் தொடர்பாக செலுத்திவரவும், புரிந்துவரவும் திருப்பூர் மாநகர ஆணையருக்கு அதிகாரமளிக்கலாம். மையச் சட்டம் 2/1974.

(*b*) அந்த அறிவிக்கையில் குறித்துரைக்கப்படக்கூடியவாறு மேற்சொன்ன தொகுப்புச் சட்டத்தின் அத்தகைய வகைமுறைகளின்படியோ அல்லது எந்த பொருட்பாடு குறித்து மாநிலச் சட்டமன்றம் மாநிலத்திற்காக சட்டமியற்ற அதிகாரம் பெற்றிருக்கின்றதோ அந்த பொருட்பாடு தொடர்பாக நடைமுறையில் உள்ள வேறு சட்டம் எதனின் வகைமுறைகளின்படியோ நிருவாகத்துறை குற்றவியல் நடுவர் ஒருவரின் அதிகாரங்களையும் கடைமைகளையும் அந்த அறிவிக்கையில் குறித்துரைக்கப்படக்கூடியவாறு திருப்பூர் மாநகரம் தொடர்பாக அதிகாரங்களைச் செலுத்திவரவும், கடமைகளைப் புரிந்துவரவும் (காவல்துறை உதவி ஆணையரின்படிநிலைக்குக் கீழுள்ள ஓர் அலுவலராக இல்லாத) திருப்பூர் மாநகரத்தில் உள்ள காவல் துறை ஆணையருக்குக் கீழ் உள்ள அலுவலர் எவருக்கும் அதிகாரம் அளிக்கலாம்.

(2) திருப்பூர் மாநகரத்தில் உள்ள காவல்துறை ஆணையருக்குக் கீழுள்ள அலுவலர் ஒவ்வொருவரும் (1)–ஆம் உட்பிரிவின்படி எந்த அதிகாரங்களை அவர் செலுத்திவரவோ அல்லது கடைமைகளை அவர் புரிந்து வரவோ அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளாரோ அந்த அதிகாரங்களில் எவற்றையும் செலுத்தி வருகையில் மற்றும் கடமைகளில் எதனையும் புரிந்து வருகையில், மேற்சொன்ன தொகுப்புச் சட்டத்தின் 20–ஆம் பிரிவின்படி நியமிக்கப்பட்டுள்ள நிருவாகத்துறை குற்றவியல் நடுவரொருவர், அந்தப் பிரிவின்படி நியமிக்கப்பட்டுள்ள மாவட்டக் குற்றவியல் நடுவரின் பொதுவான கட்டுப்பாட்டிற்கு உட்பட்டவராக இருப்பதைப்போன்றும் அதே அளவுக்கு, மேற்சொன்ன காவல்துறை ஆணையரின் பொதுவான கட்டுப்பாட்டிற்கு உட்பட்டிருத்தல் வேண்டும்.

(3) திருப்பூர் மாநகரத்தின் காவல்துறை ஆணையர் அல்லது அத்தகைய ஆணையருக்குக் கீழுள்ள அலுவலர் எவரும், (1)–ஆம் உட்பிரிவின்படி எந்த அதிகாரங்களை மற்றும் கடமைகளை அவர் செலுத்தி வரவோ அல்லது புரிந்து வரவோ அதிகாரமளிக்கப்பட்டுள்ளாரோ அந்த அதிகாரங்கள் மற்றும் கடமைகளில் எவற்றையும் செலுத்தி வருவதிலும், புரிந்து வருவதிலும், மேற்சொன்ன தொகுப்புச் சட்டத்தின் 20–ஆம் பிரிவின் படி நியமிக்கப்பட்டுள்ள மாவட்டக் குற்றவியல் நடுவரின் பொதுவான கட்டுப்பாட்டிற்கு அவர் உட்பட்டவரல்லர்.

திருப்பூர் மாநகரத்திற்கு குறிக்கப்பட்ட நாளுக்கு அடுத்து முந்தி செயல்பட்டு வந்த காவற் படையானது நீட்டிக்கப்பட்ட படியான மாநகரக் காவல் சட்டத்தின் படி அமைக்கப் பட்டுள்ள காவற்படை யாகவே கொள்ளப்படுதல் வேண்டும் எனல்.

**5.** (1) திருப்பூர் மாநகரத்தில் (இதன்பின்பு இந்தப் பிரிவில், இருந்துவந்த காவற்படை எனக் குறிப்பிடப்படுவதான) குறிக்கப்பட்ட நாளுக்கு அடுத்து முந்தி செயல்பட்டு வந்த காவற்படையானது, இந்தச் சட்டத்தின் படி செயற்பாடு நீட்டிக்கப்பட்டவாறான மாநகரக் காவல் சட்டத்தின்படி குறிக்கப்பட்ட நாளன்று திருப்பூர் மாநகரத்திற்காக அமைக்கப்பட்டுள்ள காவற்படையாகக் கொள்ளப்படுதல் வேண்டும் மற்றும், குறிக்கப்பட்ட நாளுக்கு அடுத்து முந்தி இருந்துவந்த காவற்படையில், இணைப்பு பட்டியலின் (1) –ஆம் கலப்பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பதவி வகித்து வந்த உறுப்பினர் ஒவ்வொருவரும், அந்த இணைப்புப் பட்டியலின் (2) – ஆம் கலப்பத்தியில் அதற்கு இணையான பதிவாகக் குறிப்பிடப்பட்டுள்ள பதவிக்கு குறிக்கப்பட்ட நியமிக்கப்படுவதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

(2) குறிக்கப்பட்ட நாளுக்கு அடுத்து முந்தி இருந்து வந்த காவற்படையின், காவல் அலுவலர் எவரின் முன்பாகவும் முடிவுறாது நிலுவையிலிருந்து (புலனாய்வுகள் வாயிலான நடவடிக்கைகள் உள்ளடங்கலான) நடவடிக்கைகள் அனைத்தும், குறிக்கப்பட்ட நாளன்று (1) ஆம் உட்பிரிவின்படி எந்தப் பதவிக்கு அவர்கள் நியமனம் செய்யப்படுவதாகக் கொள்ளப்படுகின்றாரோ அந்தப் பதவியை வகிப்பவர் என்கின்ற தகுதியில் அவர் முன்பு நிலுவையிலுள்ள நடவடிக்கைகளாகக் கொள்ளப்பட்டு அவ்வாறே அவை மேற்கொண்டு நடத்தப்படுதலும் வேண்டும்.

(3) குறிக்கப்பட்ட நாளுக்கு அடுத்து முந்தி மாவட்டக் குற்றவியல் நடுவரொருவரால் அல்லது நிருவாகத்துறை குற்றவியல் நடுவரொருவரால் சட்டம் எதன்படியும் செலுத்தப்படக்கூடியதான அதிகாரம் அல்லது ஆற்றப்படக்கூடியதான பணி எதுவும், நீட்டிக்கப்பட்டபடியான மாநகரக் காவல் சட்டத்தினாலோ அல்லது அதன்படியாகவோ காவல்துறை ஆணையருக்கோ அல்லது காவல் துறையில் உள்ள பிற அலுவலர் எவருக்குமோ வழங்கப்பட்டிருக்குமிடத்து, அத்தகைய வழங்குகைக்கு அடுத்து முந்தி மாவட்ட குற்றவியல் நடுவர் அல்லது நேர்விற்கேற்ப நிருவாகத்துறை நடுவரின் முன்னர் நடப்பிலிருந்து, அத்தகைய அதிகாரத்தை செலுத்துவது அல்லது அத்தகைய பணியை ஆற்றுவது தொடர்பான அல்லது அதிலிருந்து எழுகின்ற நடவடிக்கைகள் அனைத்தும், காவல்துறை ஆணையருக்கு அல்லது காவல்துறையின் பிற அலுவலருக்கு அத்தகைய அதிகாரம் அல்லது பணியானது வழங்கப்பட்டதன் காரணமாக திருப்பூர் மாநகரக் காவல்துறை ஆணையருக்கு அல்லது நேர்விற்கேற்ப காவல்துறையின் பிற அலுவலருக்கு மாற்றப்பட்டதாயிருத்தல் வேண்டும்; மற்றும் எந்த அலுவலருக்கு அவ்வாறு அத்தகைய நடவடிக்கைகள் மாற்றப்பட்டுள்ளனவோ அந்த அலுவலர் அவற்றைப் புதிதாகவோ அல்லது மாற்றம் செய்யப்பட்டுள்ள அத்தகைய நிலையிலுருந்தோ மேற்கொள்ளுதல் வேண்டும்.

திருப்பூர் மாநகரக் காவல்துறை ஆணையரின் மீது காவல்துறை தலைமை இயக்குநரின் கட்டுப்பாடு.

**6.** (1) திருப்பூர் மாநகரக் காவல்துறை ஆணையர், அப்பகுதிக்குச் செயற்பாடு நீட்டிக்கப்பட்டபடியான மாநகரக் காவற்படைச் சட்டத்தில் என்ன அடங்கியிருந்தபோதிலும், அவ்வாறு நீட்டிக்கப்பட்டவாறான மாநகரக் காவல் சட்டத்தின் கீழ் தமது பணியைச் செய்து வருகையில் (2)–ஆம் உட்பிரிவின் படி செய்யபடக்கூடிய விதிகள் எவற்றுக்கும் உட்பட்டு, தமிழ்நாடு மாநிலத்திற்கான காவல்துறைத் தலைமை இயக்குநரின் கட்டுப்பாட்டின் கீழும் செயலாட்சியின் கீழும் இருந்து வருவார்கள்.

(2) திருப்பூர் மாநகரக் காவல்துறை ஆணையரைப் பொறுத்து, (1)–ஆம் உட்பிரிவின்படி காவல்துறைத் தலைமை இயக்குநருக்கு அளிக்கப்பட்டுள்ள கட்டுப்பாட்டு மற்றும் செயலாட்சி அதிகாரங்களைச் செலுத்தி வருவதை வரையறுப்பதற்கும் முறைப்படுத்துவதற்குமான விதிகளைச் செய்வதற்கு அரசுக்கு உரிமையுண்டு.

(3) மாவட்ட குற்றவியல் நடுவரொருவராகவோ அல்லது நிருவாகத்துறை குற்றவியல் நடுவரொருவராகவோ சட்டம் எதன்படியும், திருப்பூர் மாநகரக் காவல்துறை ஆணையரால் செலுத்தப்படக்கூடிய அதிகாரங்கள் அல்லது ஆற்றப்படக்கூடிய பணிகள் தொடர்பாக இந்தப் பிரிவிலுள்ள எதுவும் பொருந்துதலாகாது.

திருப்பூர் மாநகரத்தில் நடைமுறையில் இல்லாத சட்டங்களைக் குறிப்பிடும் சுட்டுகைகளுக்குப் பொருள் கொள்ளுதல்.

**7.** (i) குறிக்கப்பட்ட நாளன்று திருப்பூர் மாநகரத்தில் நடைமுறையில் இல்லாத சட்டமொன்று குறித்து இந்தச் சட்டத்தினால் செயற்பாடு நீட்டிக்கப்பட்டவாறான மாநகரக் காவல் சட்டத்தில் உள்ள சுட்டுகை எதுவும், மேற்சொன்ன மாநகரம் தொடர்பாக மேற்சொன்ன மாநகரத்தில் நடைமுறையில், நேரிணையான வேறு சட்டம் ஏதேனுமிருப்பின், அதைக் குறிக்கும் ஒரு சுட்டுகையாகப் பொருள் கொள்ளப்படுதல் வேண்டும்.

(2) 1859ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட காவல் சட்டத்திற்கான சுட்டுகை எதுவும் குறிக்கப்பட்ட நாளன்றும் அது முதற்கொண்டும் திருப்பூர் மாநகரத்தில் நடைமுறையிலுள்ள சட்டம் எதிலும் அந்த மாநகரம் தொடர்பாக மாநகரக் காவல் சட்டத்திற்கானச் சுட்டுகை ஒன்றாகப் பொருள் கொள்ளப்படுதல் வேண்டும். மையச் சட்டம் XXIV/1859.

நேரிணையான சட்டத்தை நீக்கம் செய்தல்.

**8.** குறிக்கப்பட்ட நாளுக்கு உடன் முன்னர் (இதன்பின்பு இந்தப் பிரிவில் மையச் சட்டம் எனக் குறிப்பிடப்படுவதான) 1859 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட காவல் சட்டம் உள்ளடங்கலான திருப்பூர் மாநகரத்தில் உள்ள பிற சட்டம் இருக்குமானால் அவையும் மற்றும் மாநகரச் சட்டத்திற்கு இணையான மையச் சட்டத்தின் 54–A எனும் பிரிவின்படி அறிவிக்கையின் வாயிலாக நீட்டிக்கப்பட்ட, மையச் சட்டத்திற்கான இணைப்புப் பட்டியலில் குறித்துரைக்கப்பட்ட மாநகரக் காவல் சட்டத்தின் வகைமுறைகளும் என்பதான அத்தகைய இணையான சட்டமானது, எந்தப் பொருட்பாடுகளைப் பொறுத்து மாநிலச் சட்டமன்றம் மாநிலத்திற்காக சட்டமியற்ற அதிகாரம் பெற்றிருக்கின்றதோ அந்தப் பொருட்பாடுகளைப் பொறுத்தவரையில் குறிக்கப்பட்ட நாளன்று திருப்பூர் மாநகரம் தொடர்பாக நீக்கம் செய்யப்படுவதாதல் வேண்டும். மையச் சட்டம் XXIV/1859.

காப்புகள்.

**9.** (1) இணையான சட்டம் எதனின் 8 ஆம் பிரிவின்படியான நீக்கமானது,–

(*a*) அத்தகைய சட்டம் எதனின் முந்தைய செயற்பாடு அல்லது அதன்படி செய்யப்பட்ட செயல் அல்லது முறையே உள்ளலான பாதிப்பு எதனையுமோ; அல்லது

(*b*) அத்தகைய சட்டம் எதன்படியும் அடைந்த உரிமை, கடப்பாடு அல்லது கடமைப் பொறுப்பு எதனையுமோ; அல்லது

(*c*) அத்தகைய சட்டம் எதற்கும் எதிராக செய்யப்பட்ட குற்றச் செயல் எதனையும் பொறுத்த அளவில், ஏற்க நேரிட்ட தண்டம், தண்டனை இழப்பு அல்லது தண்டனை எதனையுமோ; அல்லது

(*d*) முன்சொன்னவாறான அத்தகைய உரிமை, சிறப்புரிமை, கடப்பாடு, கடமைப்பொறுப்பு, தண்டம், தண்டஇழப்பு அல்லது தண்டனை தொடர்பான புலனாய்வு, சட்ட நடைமுறை அல்லது தீர்வழி எதனையும் பாதித்தல் கூடாது; மற்றும் அத்தகைய புலனாய்வு சட்ட நடைமுறை அல்லது தீர்வழி எதுவும் தொடங்கப்படலாம், தொடரப்படலாம் அல்லது நிறைவேற்றப்படலாம் மற்றும் அத்தகைய தண்டம், தண்டஇழப்பு, தண்டனை எதுவும் மாநகரக் காவல் சட்டம் நீட்டிக்கப்படாமல் இருந்திருந்தாற் போன்றே விதிக்கப்படலாம்.

(2) (1) ஆம் உட்பிரிவின் வகைமுறைகளுக்கு உட்பட்டு அத்தகைய இணையான சட்டத்தின்படி செயல்விளைவு கொள்ளும்வகையில் செய்யப்பட்ட நியமனம் அல்லது ஒப்படைவு, பிறப்பிக்கப்பட்ட அறிவிக்கை, ஆணை, அறிவுரை அல்லது பணிப்புரை, வகுக்கப்பட்ட விதி, ஒழுங்குமுறை விதி, படிவம், துணைவிதி அல்லது திட்டம், வழங்கப்பட்ட சான்றிதழ், அனுமதி அல்லது உரிமம் அல்லது பதிவு எதுவும் உள்ளடங்கலாக செய்யப்பட்ட செயல் எதுவும் அல்லது எடுக்கப்பட்ட நடவடிக்கை எதுவும் திருப்பூர் மாநகரம் தொடர்பாக அதற்கு இணையான மாநகரக் காவல் சட்டத்தின் வகைமுறைகளின்படி செய்யப்பட்டிருப்பதாகவோ அல்லது எடுக்கப்பட்டிருப்பதாகவோ கொள்ளப்படுதல் வேண்டும்; மற்றும் அதற்கிணங்கிய வகையில், நீட்டிக்கப்பட்டவாறான மேற்சொன்ன மாநகரக் காவல் சட்டத்தின்படி செய்யப்பட்ட செயல் எதன்படியும் அல்லது எடுக்கப்பட்ட நடவடிக்கை எதன்படியும் மாற்றியமைக்கப்பட்டிருந்தாலன்றி மற்றும் மாற்றியமைக்கப்படும்வரையில் தொடர்ந்து நடைமுறையில் இருந்து வருதல் வேண்டும்.

புதிய அதிகார அமைப்புகள் அமைத்துருவாக்கப்பட்டிருக்கின்றவிடத்து, அதிகார அமைப்புகளைக் குறிப்பிடும் சுட்டுகைக்குப் பொருள் கொள்ளுதல்.

**10.** திருப்பூர் மாநகரத்தில் அதிகாரங்கள் எவற்றையும் செலுத்தி வருவதற்கு அல்லது பணிகள் எவற்றையும் ஆற்றிவருவதற்கு, குறிக்கப்பட்ட நாளுக்கு அடுத்து முந்திய தேதியன்று, தகுதியுடையதாயிருந்த அதிகார அமைப்பு எதற்கும் நடைமுறையிலுள்ள சட்டம் எதிலும் எந்த வடிவம் மூலமாகவோ அல்லது சொற்களின் மூலமாகவோ குறிப்பிடப்படும் சுட்டுகை எதுவும், மேற்சொன்ன மாநகரத்திற்கு நீட்டிக்கப்பட்டவாறான மாநகரக் காவல் சட்டத்தின் மூலமாகவோ அல்லது அதன்படியாகவோ அல்லது இந்தச் சட்டத்தின்படியாகவோ மேற்சொன்ன மாநகரத்திற்கு நேரிணையான புதிய அதிகார அமைப்பொன்று அமைத்துருவாக்கப் பட்டிருக்கின்றவிடத்து,

அது அந்தப் புதிய அதிகார அமைப்பைக் குறிப்பிடும் ஒரு சுட்டுகையாக இருந்தாற்போன்று செயல்விளைவு கொள்ளுதல் வேண்டும்.

மாநகர் காவல் சட்டத்தைப் பொருந்தச் செய்வதற்கு உதவுகின்ற நோக்கங்களுக்காக நீதிமன்றங்கள், பிற அதிகார அமைப்புகள் ஆகியவற்றிக்கான அதிகாரங்கள்.

**11.** திருப்பூர் மாநகரத்தில் அப்பகுதிக்குச் செயற்பாடு நீட்டிக்கப்பட்டபடியான மாநகரக் காவல் சட்டத்தைப் பொருந்தச் செய்வதற்கு உதவுகின்ற நோக்கத்திற்காக, நீதிமன்றம் எதுவும் அல்லது பிற அதிகார அமைப்பு எதுவும் அந்த நீதிமன்றத்தின் அல்லது அந்த அதிகார அமைப்பின் முன்பு உள்ள பொருட்பாடு எதற்கும் ஏற்றபடி அதன் சாராம்சத்தைப் பாதிக்காமல் மேற்சொன்ன சட்டத்தைத் தழுவிப் பொருந்தச் செய்வதற்குத் தேவையானதாகவோ முறையானதாகவோ இருக்கக்கூடிய மாறுதல்களுடன் அதற்குப் பொருள் கொள்ளலாம்.

விதிகளைச் செய்வதற்கான அதிகாரம்.

**12.** (1) அரசு, இந்தச் சட்டத்தின் நோக்கங்கள் அனைத்தையும் அல்லது அவற்றில் எதையும் நிறைவேற்றுவதற்கான விதிகளைச் செய்யலாம்.

(2) இந்தச் சட்டத்தின்படிச் செய்யப்படும் விதிகள் அனைத்தும் ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படுதல் வேண்டும்; மேலும் குறிப்பிட்டதொரு நாளன்று அவை நடைமுறைக்கு வருதல் வேண்டும் என வெளிப்படையாகச் சொல்லப்பட்டிருந்தாலன்றி, அவை அவ்வாறு வெளியிடப்பட்ட நாளன்றே நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

(3) இந்தச் சட்டத்தின்படி பிறப்பிக்கப்பட்ட அறிவிக்கைகள் அனைத்தும், குறிப்பிட்டதொரு நாளன்று அவை நடைமுறைக்கு வருதல் வேண்டும் என்று வெளிப்படையாகச் சொல்லப்பட்டிருந்தாலன்றி, அவை அவ்வாறு வெளியிடப்படும் நாளன்றே நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

(4) இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட விதி அல்லது பிறப்பிக்கப்பட்ட அறிவிக்கை அல்லது ஆணை ஒவ்வொன்றும் அது செய்யப்பட்ட அல்லது பிறப்பிக்கப்பட்ட பின்னர், கூடிய விரைவில், சட்டமன்றப் பேரவையின் முன்பு வைக்கப்படுதல் வேண்டும், மற்றும் அது அவ்வாறு வைக்கப்பட்ட கூட்டத் தொடரோ அல்லது அதனை அடுத்துவரும் கூட்டத் தொடரோ முடிவடைவதற்கு முன்னர் சட்ட மன்றப் பேரவை அந்த விதியில் அறிவிக்கையில் அல்லது ஆணையில் மாறுதல் எதையும் செய்வதற்கு உடன்படுமானால் அல்லது அந்த விதி செய்யப்படுதலோ அல்லது அறிவிக்கை அல்லது ஆணை பிறப்பிக்கப்படுதலோ ஆகாது என்று உடன்படுமானால் அந்த விதி அல்லது அறிவிக்கை அல்லது ஆணை அத்தகைய மாற்றியமைக்கப்பட்ட வடிவத்தில் மட்டுமே நடைமுறைக்கு வருதல் வேண்டும். அல்லது நேர்விற்கேற்ப நடைமுறைக்கு வராது போதல் வேண்டும். எனினும் அவ்வாறு மாறுதல் செய்வது அல்லது நடைமுறைக்கு வராமற்போனது எதுவும் அந்த விதி அல்லது அறிவிக்கை அல்லது ஆணையின் கீழ் முன்னதாகச் செய்யப்பட்டுள்ள செயல் ஏதோன்றின் செல்லுந்தன்மைக்கும் பாதகமின்றி இருத்தல் வேண்டும்.

இடர்ப்பாடுகளை நீக்குவதற்கான அதிகாரம்.

**13.** இந்தச் சட்டத்தின்படி திருப்பூர் மாநகரத்திற்குச் செயற்பாடு நீட்டிக்கப்பட்டபடியான மாநகரச் சட்டத்தின் வகைமுறைகளைச் செயற்படுத்துவதில் இடர்ப்பாடு ஏதேனும் எழுமானால் அரசு, தறுவாய் கோருகிறவாறு, ஆணையின் மூலம் அந்த இடர்ப்பாட்டை நீக்குகின்ற நோக்கத்திற்காகத் தேவையானதென அதற்குத் தோன்றக் கூடிய எதனையும் செய்யலாம்:

**வரம்புரை:–** ஆனால், குறிக்கப்பட்ட நாளிலிருந்து இரண்டாண்டுகள் முடிவடைந்த பின்னர், இந்தப் பிரிவின்படியான ஆணை எதுவும் பிறப்பிக்கப்படுதல் கூடாது.

நீக்கமும் காப்பும்.

தமிழ்நாடு அவசரச்சட்டம் 18/2012.

**14.** (1) 2012 ஆம் ஆண்டு சென்னை மாநகரக் காவல் (திருப்பூர் மாநகரத்திற்குச் செயற்பாடு நீட்டிப்பு) அவசரச் சட்டமானது இதன்மூலம் நீக்கம் செய்யப்படுகிறது,

(2) அவ்வாறு நீக்கம் செய்யப்பட்டிருக்கின்றபோதிலும், மேற்சொன்ன அவசரச் சட்டத்தின்படி செய்யப்பட்ட செயல் எதுவுமோ அல்லது எடுக்கப்பட்ட நடவடிக்கை எதுவுமோ இந்தச் சட்டத்தின் வகைமுறைகளின்படி செய்யப்பட்டுள்ளதாகவோ அல்லது எடுக்கப்பட்டுள்ளதாகவோ கொள்ளப்படுதல் வேண்டும்.

**இணைப்புபட்டியல்**

(5 ஆம் பிரிவைக் காண்க)

| *குறிக்கப்பட்ட நாளுக்கு அடுத்த முந்தியவாறு அலுவலரின் பதவிப்பெயர்* | *அலுவலரானவர் நியமனம் செய்யப்படுவதாகக் கொள்ளப்படவேண்டிய பதவி* |
|---|---|
| *(1)* | *(2)* |
| (1) காவல் துறைக் கண்காணிப்பாளர் | காவல்துறை ஆணையர்<br><br>**வரம்புரை :** ஆனால், குறிக்கப்பட்டநாளுக்குப் பின்னர் அரசானது, காவல்துறைத் துணைத் தலைவர் படிநிலையிலுள்ள அலுவலர் ஒருவரை காவல் துறை ஆணையராக நியமனம் செய்யலாம்:<br><br>**இரண்டாம் வரம்புரை:** மேலும், காவல்துறைத் துணைத் தலைவர் படிநிலையில்லுள்ளவர் காவல் துறை ஆணையரொருவராக நியமனம் செய்யப்படுமிடத்து, அரசானது காவல் துறைக் கண்காணிப்பாளர் படிநிலையிலுள்ளவரை காவல் துறைத் துணை ஆணையரொருவராக நியமனம் செய்யலாம். |
| (2) காவல் துறைக் துணைக் கண்காணிப்பாளர் | காவல் துறை உதவி ஆணையர். |

**நோக்க—காரண விளக்கவுரை.**

திருப்பூர் மாநகரமானது அளவிலும் மக்கள் தொகையிலும் வளர்ந்து வருவதாலும், இடம்பெயர்ந்து வரும் தொழிலாளர்கள் மற்றும் போக்குவரத்து நெரிசல் ஆகிய பிரச்சினைகளில் சிக்கித்தவிப்பதாலும், ஆணையரகம் ஒன்றை அமைப்பது தேவையென தெளிவாக உணரப்பட்டுள்ளது என்றும் திருப்பூரில் காவல் துறையின் தரத்தை மேம்படுத்துவதன்பொருட்டு புதியதொரு காவல் துறை ஆணையரகம் திருப்பூரில் அமைத்துருவாக்கப்படும் என்றும் மாண்புமிகு முதலமைச்சர் 14—11—2011 அன்று நடைபெற்ற காவல் துறை அலுவலர்களின் மாநாட்டின்போது அறிவித்தார்.

**2.** மேற்சொன்ன அறிவிப்பிற்குச் செயல்விளைவு கொடுப்பதற்கு அரசானது தற்போது இருந்துவரும் திருப்பூர் காவல் மாவட்டத்தை இரண்டாகப்பிரிக்கவும், 1888ஆம் ஆண்டு சென்னை மாநகரக் காவல் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் III/1888) வகைமுறைகளை திருப்பூர் மாநகரத்திற்கு நீட்டிப்பதன் வாயிலாக புதியதொரு காவல்துறை ஆணையரகம் ஒன்றை திருப்பூர் மாநகரத்திற்காக அமைத்துருவாக்கவும் முடிவு செய்தது. அதற்கிணங்கிய வகையில் 2012 ஆம் ஆண்டு சென்னை மாநகரக் காவல் (திருப்பூர் மாநகரத்திற்குச் செயற்பாடு நீட்டிப்பு) அவசரச் சட்டமானது (தமிழ்நாடு அவசரச் சட்டம் 18/2012) 2012—ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 24ஆம் தேதியன்று ஆளுநரால் பிறப்பிக்கப்பட்டு, அது 2012ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 8ஆம் தேதியிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** சிறப்பிதழில் வெளியிடப்பட்டது.

**3.** இந்தச் சட்டமுன்வடிவு மேற்சொன்ன அவசரச் சட்டத்திற்குப் பதிலாக அமைய விழைகிறது.

**ஜெ ஜெயலலிதா,**
*முதலமைச்சர்.*

**நிதிபற்றிய குறிப்பு.**

2012ஆம் ஆண்டு சென்னை மாநகரக் காவல் (திருப்பூர் மாநகரத்திற்குச் செயற்பாடு நீட்டிப்புச்) சட்டமுன்வடிவானது சட்டமாக இயற்றப்பட்டு நடைமுறைக்குக் கொண்டுவரப்படும்போது அதனை நடைமுறைப்படுத்துவதற்கு இம்மாநிலத்தொகு நிதியத்திலிருந்து செலவு செய்ய நேரிடும். எனினும் இந்த நிலையில், கருதியுள்ள இந்தச் சட்டத்தை இயற்றுவதன் விளைவாக ஏற்படக்கூடிய செலவு இவ்வளவு என்பதை எந்தக் கோணத்திலும் துல்லியமாக இந்தக் கட்டத்தில் மதிப்பிட்டுக் கூற இயலாது.

**ஜெ ஜெயலலிதா,**
*முதலமைச்சர்.*

**சட்டமியற்று அதிகார ஒப்படைவு பற்றிய குறிப்பு.**

இந்தச் சட்டமுன்வடிவின் 4(1) எனும் கூறானது, திருப்பூர் மாநகரத்தில் காவல் துறை ஆணையருக்கு மற்றும் ஒருசில பிற அலுவலர்களுக்கு, 1973ஆம் ஆண்டு குற்றவியல் விசாரணைமுறை தொகுப்புச் சட்டத்தின்படியான(மையச் சட்டம் 2/1974) மாவட்டக் குற்றவியல் நடுவர் மற்றும் நிருவாகத்துறைக் குற்றவியல் நடுவர் ஆகியோரின் அதிகாரங்களைச் செலுத்திவருவதற்கும் கடமைகளை ஆற்றிவருவதற்கும் அதிகாரமளிப்பதற்கு அரசினை இயல்விக்கிறது. இச்சட்டமுன்வடிவின் 6(2), 12 ஆகிய கூறுகள் கருதப்பட்ட சட்டத்தின் நோக்கங்கள் அனைத்தையும் அல்லது அவற்றில் ஏதொன்றையும் நிறைவேற்றுவதற்கான விதிகளைச் செய்வதற்கு அரசுக்கு அதிகாரமளிக்கிறது. இச்சட்டமுன்வடிவின் 13ஆம் கூறானது, இச்சட்டமுன்வடிவின் வகைமுறைகளுக்கு அது இயற்றப்படும்போது செயல்விளைவுகொடுப்பதில் இடர்ப்பாடு எதுவும் எழுமானால் அதனை நீக்கும் நோக்கத்திற்கான ஆணை எதனையும் பிறப்பிப்பதற்கு அரசினை இயல்விக்கிறது.

**2.** ஒப்படைவு செய்யப்பட்ட அதிகாரங்கள் இயல்பானவையே அன்றி தனித்தன்மை வாய்ந்தவை அல்ல.

**ஜெ ஜெயலலிதா,**
*முதலமைச்சர்.*

அ.மு.பி. ஜமாலுதீன்,
*செயலாளர்.*

**2012–ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 1ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130–ஆம் விதியின் கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.**

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 44/2012.**

**1994ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தை மேலும் திருத்துவதற்கானதொரு சட்டமுன்வடிவு.**

இந்தியக்குடியரசின் அறுபத்து மூன்றாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்ற பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:–

**1.** (1) இந்தச் சட்டம், 2012ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும். குறுந்தலைப்பும் தொடக்கமும்.

(2) இது அரசு அறிவிக்கையின் வாயிலாகக் குறிக்கக்கூடிய அத்தகைய தேதியில் நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 21/1994.

**2.** (இதன்பின்பு இதில் முதன்மைச் சட்டம் எனக்குறிப்பிடப்படுவதான) 1994ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின், 37ஆம் பிரிவில், (3)ஆம் உட்பிரிவில், (a) எனும் கூறுக்குப் பதிலாக, பின்வரும் கூறானது அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:— 37ஆம் பிரிவிற்கான திருத்தம்.

"(*a*) மனச்சீர்கேடுற்றவராகவோ;".

**3.** முதன்மைச் சட்டத்தின் 38–ஆம் பிரிவில், (3)ஆம் உட்பிரிவில், (a) எனும் கூறுக்குப் பதிலாக பின்வரும் கூறானது அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:— 38ஆம் பிரிவிற்கான திருத்தம்.

"(*a*) மனச்சீர்கேடுற்றவராக ஆகியிருப்பாராயின்;".

**நோக்க—காரண விளக்கவுரை**

தமிழ்நாட்டின் மக்கள் தொகையில் நூற்றுக்கு 3 விழுக்காடு என்ற அளவுக்கு, மாற்றுத்திறனாளிகள் உள்ளனர். அந்த மாற்றுத்திறனாளிகளுக்கிடையே பல நபர்கள் உயர்கல்வித்தகுதியையும் தகவல் தொடர்புத் திறமைகளுக்கான திறனையும் கொண்டு விளங்குகின்றனர். எனினும் செவிட்டு — ஊமையர் வகையைச் சார்ந்த மக்கள், 1994ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின்படி (தமிழ்நாடு சட்டம் 21/1994) தேர்தல்களில் போட்டியிடுவதற்குத் தகுதியற்றவர்களாக உள்ளனர். இது சரியான அடிப்படையில் அமையவில்லையெனலாம். எனவே, அரசானது மேற்சொன்ன சட்டத்தின் 37, 38 ஆகிய பிரிவுகளின், (3)ஆம் உட்பிரிவில், (a) எனும் கூறில் ''அல்லது செவிட்டு — ஊமையராகவோ'' எனும் சொற்றொடரை விட்டுவிடுவதன் மூலம், மேற்சொன்ன 21/1994 எனும் எண்ணிட்ட தமிழ்நாடு சட்டத்தைத் திருத்துவதென முடிவு செய்துள்ளது.

2. இச்சட்டமுன்வடிவு மேற்சொன்ன முடிவிற்குச் செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

**கே.பி. முனுசாமி,**
*அமைச்சர்,*
*நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சி.*

அ.மு.பி. ஜமாலுதீன்,
*செயலாளர்.*

**2012ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 1ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க காரண விளக்கவுரையுடன் சேர்ந்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130ஆம் விதியின் கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.**

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 45/2012.**

**1994ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டத்தை மேலும் திருத்துவதற்கானதொரு சட்டமுன்வடிவு.**

இந்தியக் குடியரசின் அறுபத்து மூன்றாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:-

குறுந்தலைப்பும் தொடக்கமும்.

**1.** (1) இந்தச் சட்டம், 2012ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது, மாநில அரசு அறிவிக்கையின் வாயிலாகக் குறிக்கக்கூடிய அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 21/1994.

257–AA எனும் புதிய பிரிவைப் புகுத்துதல்.

**2.** 1994ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் 257–A எனும் பிரிவிற்குப் பின்பு, பின்வரும் பிரிவானது புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:-

**"257–AA. நீச்சல் குளத்தைக் கட்டுவதற்கான அனுமதி.–**

(1) குறிக்கப்பட்ட நாளுக்குப் பின்னர் ஆய்வாளரிடமிருந்து அனுமதியொன்றைப் பெறாமல், நீச்சல் குளம் எதுவும் எந்த இடத்திலும் கட்டப்படுதல் கூடாது.

(2) நீச்சல் குளம் ஒன்றைக் கட்டுவதற்கு அனுமதி பெறுவதற்கான விண்ணப்பம் ஒவ்வொன்றும் ஆய்வாளரிடம் செய்யப்படுதல் வேண்டும்; மற்றும் அது வகுத்துரைக்கப்படக்கூடியவாறான ஐந்தாயிரம் ரூபாய்க்கு மேற்படாத அத்தகைய கட்டணத்துடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்; மற்றும் வகுத்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய விவரங்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(3) ஆய்வாளரானவர், (2)–ஆம் உட்பிரிவின்படியான விண்ணப்பம் ஒன்று வரப்பெற்றதன் பேரில், தான் தேவையெனக் கருதுகிறவாறான அத்தகைய விசாரணையைச் செய்த பின்னர், அதற்கு அனுமதியை வழங்கலாம் அல்லது வழங்க மறுக்கலாம். வழங்கப்படும் அனுமதி ஒவ்வொன்றும் வகுத்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய படிவத்திலும் அத்தகைய வரையறைகள் மற்றும் நிபந்தனைகளுக்குட்பட்டும் இருத்தல் வேண்டும்.

(4) ஆய்வாளரானவர், (3)–ஆம் உட்பிரிவின்படி அனுமதியை வழங்குவதற்கு மறுக்குமிடத்து, அத்தகைய மறுப்பிற்கானக் காரணங்களை அவர் எழுத்துருவில் அளித்தல் வேண்டும்.

(5) குறிக்கப்பட்ட நாளுக்கு உடனடி முன்னதாகவே நீச்சல் குளம் ஒன்று அமைந்துள்ள கட்டிடம் அல்லது நிலம் ஒன்றின் உரிமையாளர் அல்லது கையுடைமையாளர் எவரும், அத்தகைய நீச்சல் குளத்தைப் பொறுத்த அளவில், குறிக்கப்பட்ட நாளிலிருந்து மூன்று மாதங்கள் கொண்டதொரு கால அளவிற்குள், இந்தப் பிரிவின்படி அனுமதி ஒன்றைப் பெற்றாலன்றி, அவர் அத்தகைய நீச்சல் குளத்தைப் பயன்படுத்துவதைத் தொடருதல் கூடாது.

(6) நீச்சல் குளம் ஒன்று அமைந்துள்ள கட்டிடம் அல்லது நிலம் ஒன்றின் உரிமையாளர் அல்லது கையுடைமையாளர் ஒவ்வொருவரும், வகுத்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய முறையிலும் அத்தகைய பாதுகாப்பிற்கான வழிகாட்டு நெறி முறைகளைப் பின்பற்றியும் அந்த நீச்சல் குளத்தைப் பேணிவருதல் வேண்டும்.

(7) ஆய்வாளரால் இதன் பொருட்டு அதிகாரம் அளிக்கப்பட்ட நபர் எவரும், விசாரணை அல்லது ஆய்வு எதனையும் செய்வதன்பொருட்டு நீச்சல் குளமொன்று அமைந்துள்ள கட்டிடம் அல்லது நிலம் எதிலும் நுழையலாம்; மேலும் அவர் நீச்சல் குளத்தைப் பேணி வரும் நோக்கத்திற்காக அல்லது நீச்சல் குளத்தைப் பயன்படுத்தும் நபர்களின் பாதுகாப்பிற்காகவென அவர்தம் கருத்தில் தேவையெனக் கருதப்படும் நடவடிக்கைகள் எவற்றையும் எடுக்கலாம் அல்லது செயல் எதனையும் செய்யலாம்.

**வரம்புரை**: ஆனால், இந்த உட்பிரிவின் நோக்கத்திற்காக அரசு,–

(i) பள்ளிக்கூடங்களின் வளாகங்களுக்குள் அமைந்துள்ள நீச்சல் குளங்களைப் பொறுத்த அளவில், பள்ளிக்கல்வி இயக்குநரின் அலுவலகத்தில் இணை இயக்குநர் படிநிலைக்குக் குறையாத அலுவலர் எவருக்கும்;

(ii) கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களின் வளாகங்களுக்குள் அமைந்துள்ள நீச்சல் குளங்களைப் பொறுத்த அளவில், கல்லூரிக் கல்வி இயக்குநரின் அலுவலகத்தில் இணை இயக்குநர் படிநிலைக்குக் குறையாத அலுவலர் எவருக்கும் அதிகாரம் அளித்தல் வேண்டும்.

(8). (7)–ஆம் உட்பிரிவின் நோக்கத்திற்காக அரசானது, நீச்சல் குளங்கள் அமைந்துள்ள பல்வேறு வகையான கட்டிடங்கள் அல்லது நிலங்களுக்கு வெவ்வேறு நபர்களுக்கு அதிகாரம் அளிக்கலாம்.

**விளக்கம்**.– இந்தப்பிரிவின் நோக்கத்திற்காக, ''குறிக்கப்பட்ட நாள்'' என்றால் 2012ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்தச்) சட்டத்தின் 1ஆம் பிரிவின், (2)ஆம் உட்பிரிவின்படி அரசால் அறிவிக்கையின் வாயிலாகக் குறிக்கக்கூடிய அத்தகைய தேதி எனப்பொருள்படும்.''.

**நோக்க—காரண விளக்கவுரை.**

நீச்சல் குளத்தைக் கட்டுவதிலும் அதனைப் பேணிவருவதிலும் பாதுகாப்பு வழி முறைகள் இல்லாததன் காரணமாக பள்ளி மாணவன் ஒருவனுக்கு துர்மரணம் ஏற்பட்டுள்ளது என்பது அரசின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளது. எனவே அரசானது, நீச்சல் குளங்களைப் பயன்படுத்துபவர்களின் பாதுகாப்பையும் காப்புறுதித் தன்மையையும் உறுதி செய்வதற்கான முக்கியத்துவம் மிக்க மற்றும் பரந்த வழி முறைகளை குறிப்பாகக் கல்வி நிறுவனங்களில் ஏற்படுத்தவேண்டியது கட்டாயத் தேவையானதெனக் கருதுகிறது. அதற்கிணங்கிய வகையில், நீச்சல் குளங்களைக் கட்டுவதையும் அவற்றைப் பேணிவருவதையும் அவற்றை மேற்பார்வை செய்வதையும் திறம்பட ஒழுங்குமுறைப்படுத்துவதற்காக, அரசானது 1994ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தைத் (தமிழ்நாடு சட்டம் 21/1994) தக்கவாறு திருத்துவதென முடிவு செய்துள்ளது.

2. இச்சட்டமுன்வடிவு மேற்சொன்ன முடிவிற்குச் செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

**கே.பி. முனுசாமி,**
*அமைச்சர்,*
*நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சி.*

**சட்டமியற்று அதிகார ஒப்படைவு பற்றிய குறிப்பு.**

இச்சட்ட முன்வடிவின் 2ஆம் கூறினால் 1994–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தில் (தமிழ்நாடு சட்டம் 21 /1994) புகுத்தக் கருதப்படும் 257-AA எனும் புதிய பிரிவானது அவற்றில் குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களுக்காக விதிகளைச் செய்வதற்கு அரசுக்கு அதிகாரமளிக்கிறது; மற்றும் அலுவலர் ஒருவருக்கு அல்லது நபர் ஒருவருக்கு கட்டிடம் அல்லது நிலம் எதிலும் நுழைவதற்கான அதிகாரத்தை அளிப்பதற்கு அரசுக்கும் ஆய்வாளருக்கும் அதிகாரமளிக்கிறது.

**2.** ஒப்படைவு செய்யப்பட்ட அதிகாரங்கள் இயல்பானவையேயன்றி, தனித்தன்மை வாய்ந்தவையல்ல.

**கே.பி. முனுசாமி,**
*அமைச்சர்,*
*நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சி.*

அ.மு.பி. ஜமாலுதீன்,
*செயலாளர்.*

**2012ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 1ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130ஆம் விதியின் கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.**

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 46/2012.**

**1971ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்—ஊரமைப்புச் சட்டத்தை மேலும் திருத்துவதற்கானதொருச் சட்டமுன்வடிவு.**

இந்தியக் குடியரசின் அறுபத்து மூன்றாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:-

குறுந்தலைப்பும் தொடக்கமும்.

**1.** (1) இந்தச் சட்டம், 2012ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்—ஊரமைப்பு (திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது, 2012 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 16ஆம் நாளன்று நடைமுறைக்கு வந்துவிட்டிருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 35/1972.

57ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**2.** (இதன்பின்பு இதில் முதன்மைச் சட்டம் எனக் குறிப்பிடப்படுவதான) 1971ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்—ஊரமைப்புச் சட்டத்தின் 57ஆம் பிரிவில், (6)ஆம் உட்பிரிவானது அந்த உட்பிரிவின் (a) எனும் கூறாக மறு—எழுத்திடப் படுதல் வேண்டும்; மற்றும் அவ்வாறு மறு—எழுத்திடப்பட்ட (a) எனும் கூறுக்குப் பின்பு, பின்வரும் கூறுகள் சேர்க்கப்படுதல் வேண்டும், அதாவது:-

''(b) 56ஆம் பிரிவின்படி அல்லது இந்தப் பிரிவின்படி உரிய திட்ட அதிகாரஅமைப்பினால் சார்வு செய்யப்பட்ட அறிவிப்பிற்கு எதிராக நீதிமன்றம் எதிலிருந்தும் தடையாணை அல்லது இடைக்கால உறுத்துக்கட்டளை ஆணை எதனையும் பெற்றதற்குப் பின்னர், நபரெவரும் மேம்பாட்டினைத் தொடருதல் கூடாது.

(c) (b) எனும் கூறில் குறிப்பிடப்பட்ட தடையாணை அல்லது இடைக்கால உறுத்துக் கட்டளை ஆணை எதனையும் பெற்றதற்குப் பின்னர் தொடரப்பட்ட மேம்பாடு எதுவும், அதிகாரமளிக்கப்படாத மேம்பாடாகக் கொள்ளப்படுதல் வேண்டும்; மற்றும் உரிய திட்டமிடுதல் அதிகாரஅமைப்பானது அத்தகைய அதிகாரமளிக்கப்படாத மேம்பாட்டினை அறிவிப்பு எதுமின்றி இடித்துத் தள்ளலாம்.''

83ஆம் பிரிவிற்கான திருத்தம்.

3. முதன்மைச் சட்டத்தின் 83ஆம் பிரிவில்,—

(1) (1)ஆம் உட்பிரிவில், ''ஓர் ஆயிரம் ரூபாய்'' எனும் சொற்றொடருக்குப் பதிலாக, ''ஓர் இலட்சம் ரூபாய்'' என்னும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்;

(2) (2)ஆம் உட்பிரிவில், ''இருபத்தைந்து ரூபாய்க்குக் குறைவாக இல்லாமலும் ஐம்பது ரூபாய்க்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்'' எனும் சொற்றொடருக்குப் பதிலாக, ''இரண்டாயிரத்து ஐந்நூறு ரூபாய்க்குக் குறைவாக இல்லாமலும் ஐந்தாயிரம் ரூபாய்க்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்'' என்னும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்;

(3) அதன் கீழ் உள்ள விளக்கத்திற்குப் பின்பு, பின்வரும் உட்பிரிவும் விளக்கமும் சேர்க்கப்படுதல் வேண்டும், அதாவது:-

''(3). (1), (2) ஆகிய உட்பிரிவுகளின் வகைமுறைகளுக்கு ஊறின்றி, நபரெவரும்—

(a) 56ஆம் பிரிவின், (1)ஆம் உட்பிரிவின், (a) அல்லது (b) அல்லது (c) அல்லது (d) எனும் கூறில் குறித்துரைக்கப்பட்டவாறான நிலம் அல்லது கட்டிடத்தின் மேம்பாடு எதனையும் மேற்கொண்டதற்காக 56—ஆம் பிரிவின் (5)—ஆம் உட்பிரிவின்படி குற்ற வழக்கில் குற்றவாளியெனத் தீர்ப்பளிக்கப்பட்டிருப்பாராயின்; அல்லது

(b) 57ஆம் பிரிவின், (1)ஆம் உட்பிரிவின்படி அறிவிப்பு சார்வு செய்யப்பட்டதைத் தொடர்ந்து அவருக்காகவோ அல்லது உரிமையாளரின் சார்பாகவோ அல்லது பிற நபர் எவரின் சார்பாகவோ நிலம் அல்லது கட்டிடத்தின் மேம்பாட்டைத் தொடர்ந்து மேற்கொள்வாராயின்,

அவர் குற்றவாளியெனத் தீர்ப்பளிக்கப்பட்டதன்பேரில், மூன்று மாதங்களுக்குக் குறையாத மற்றும் மூன்று ஆண்டுகளுக்கு மேற்படாததொரு கால அளவிற்குச் சிறைத்தண்டனையும்

ஐம்பதாயிரம் ரூபாய்க்குக் குறையாத மற்றும் ஓர் இலட்சம் ரூபாய்க்கு மேற்படாததொரு தண்டத்தொகையும் சேர்த்து விதித்துத் தண்டிக்கப்படத்தக்கவராவார்.

**விளக்கம்**.– இந்தச் சட்டத்தின் மற்றும் 84, 85, 86 ஆகிய பிரிவுகளின் நோக்கத்திற்காக "நபரெவரும்" என்னும் சொல்லானது, நில உரிமையாளர், பொது அதிகாரப் பத்திரத்தைக் கொண்டிருப்பவர், கட்டிடம் கட்டுபவர், கட்டிட வணிகர், கட்டிடக் கலை நிபுணர், உரிமம் வழங்கப்பட்ட நில அளவையர் ஆகியோரைக் கூட்டாகவும் தனித்தனியாகவும் குறிக்கும் மற்றும் உள்ளடக்கும்.

84ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**4.** முதன்மைச் சட்டத்தின் 84–ஆம் பிரிவில்,

"ஐம்பது ரூபாய்க்குக் குறையாமலும் ஓர் ஆயிரம் ரூபாய்க்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்" எனும் சொற்றொடருக்குப் பதிலாக "ஐந்தாயிரம் ரூபாய்க்குக் குறையாமலும் ஓர் இலட்சம் ரூபாய்க்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்" என்னும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்.

85ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**5.** முதன்மைச் சட்டத்தின் 85ஆம் பிரிவில், (2)ஆம் உட்பிரிவில், (b) எனும் கூறுக்குப் பதிலாக, பின்வரும் கூறானது அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:-

"(b) அத்தகைய நபர், (a) எனும் கூறின் வகைமுறைகளுக்கு ஊறின்றி–

(i) இரண்டாயிரத்து ஐந்நூறு ரூபாய்க்குக் குறையாத மற்றும் ஐம்பதாயிரம் ரூபாய்க்கு மேற்படாத தண்டத் தொகையும்;

(ii) தொடர்ந்து தவறிழைக்கும் நேர்வில், அத்தகைய தவறு தொடர்ந்து செய்யப்படும் அந்த ஒவ்வொரு நாளுக்கும் ஐந்நூறு ரூபாய்க்குக் குறையாத மற்றும் பத்தாயிரம் ரூபாய்க்கு மேற்படாத தண்டத்தொகையும் விதித்துத் தண்டிக்கப்படத் தக்கவராவார்.".

86ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**6.** முதன்மைச் சட்டத்தின் 86ஆம் பிரிவில் (a), (b) ஆகிய கூறுகளுக்குப் பதிலாக, பின்வரும் கூறுகள் அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:-

(a) முதல் குற்றச்செயலுக்கு ஐந்நூறு ரூபாய்க்குக் குறையாத மற்றும் ஐந்தாயிரம் ரூபாய்க்கு மேற்படாத தண்டத்தொகையும்; மற்றும்

(b) இரண்டாவது அல்லது அதற்கடுத்ததாகச் செய்யும் குற்றச்செயல் எதற்கும் இரண்டாயிரம் ரூபாய்க்குக் குறையாத மற்றும் இருபதாயிரம் ரூபாய்க்கு மேற்படாத தண்டத் தொகையும் விதித்து.".

88ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**7.** முதன்மைச் சட்டத்தின் 88–ஆம் பிரிவில், (2)ஆம் உட்பிரிவில்,–

(1) (i) எனும் இனத்தில், "ஐந்நூறு ரூபாய்" எனும் சொற்றொடருக்குப் பதிலாக, "ஐம்பதாயிரம் ரூபாய்" என்னும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்.

(2) (ii) எனும் இனத்தில், "இருபத்தைந்து ரூபாய்" எனும் சொற்றொடருக்குப் பதிலாக, "இரண்டாயிரத்து ஐந்நூறு ரூபாய்" என்னும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்.

89ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**8.** முதன்மைச் சட்டத்தின் 89ஆம் பிரிவில், (1)ஆம் உட்பிரிவில், "குற்றச்செயல் இழைக்கப்பட்ட நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள்ளாக" என்னும் சொற்றொடரானது விட்டுவிடப்படுதல் வேண்டும்.

113C–எனும் புதிய பிரிவினைப் புகுத்துதல்.

**9.** முதன்மைச் சட்டத்தின் 113–B எனும் பிரிவிற்குப் பின்னர், பின்வரும் பிரிவானது புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:-

"**113–C. குறித்தசில கட்டிடங்களின் மேம்பாட்டைப் பொறுத்த அளவிலான விலக்களிப்பு.–**

இந்தச் சட்டத்தில் அல்லது அப்போதைக்கு நடைமுறையில் இருந்து வரும் பிற சட்டம் எதிலும் என்ன அடங்கியிருந்த போதிலும், அரசானது, அந்தப் பரப்பிடத்தின் சூழ்நிலையியலையும் சுற்றுச் சூழலையும் கருத்திற்கொண்டும் மற்றும் பொது மக்கள் நலன் கருதியும், உள்கட்டமைப்பை மேம்படுத்துவதன் பொருட்டும் பொது மக்களுக்கு ஏற்படும் வசதியின்மையைக் குறைப்பதன் பொருட்டும் மற்றும் அந்தப் பரப்பிடத்தில் பொது மக்களின் பாதுகாப்புக்கு உறுதியளிக்கும் பொருட்டும், 2007–ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 1–ஆம் நாளன்று அல்லது அதற்கு முன்னர் மேம்படுத்தப்பட்ட கட்டிடம் அல்லது கட்டிடங்களின் வகை எதனையும், ஆணையின் வாயிலாக, இந்தச் சட்டத்தின் அல்லது அதன்படிச் செய்யப்பட்ட விதி அல்லது ஒழுங்குமுறை விதி எதனின்

வகைமுறைகள் அனைத்திலிருந்தும் அல்லது அவற்றில் ஏதொன்றிலிருந்தும், இதுகுறித்துச் செய்யப்பட்ட வழிகாட்டு நெறிகளுக்குட்பட்டு, அந்த நிலத்தின் வழிகாட்டு மதிப்பின் மூன்று மடங்குக்கு மேற்படாத அளவில் வகுத்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய தொகையை வசூலிப்பதன் மூலம் விலக்களிப்புச் செய்யலாம். வேறுபட்ட திட்டமிடுதல் அளவுகோல்களுக்காகவும் திட்டப் பரப்பிடத்தின் வேறுபட்ட பகுதிகளுக்காகவும் வேறுபட்ட வீதங்கள் வகுத்துரைக்கப்படலாம்.".

**10.** முதன்மைச் சட்டத்திற்கான Iஆம் இணைப்புப் பட்டியலுக்குப் பதிலாக, பின்வரும் இணைப்புப்பட்டியலானது அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:- I ஆம் இணைப்புப் பட்டியலுக்குப் பதிலாக அமைத்தல்.

**Iஆம் இணைப்புப்பட்டியல்.**

(83ஆம் பிரிவைக் காண்க)

| *பிரிவு* | *உட்பிரிவு அல்லது கூறு* | *பொருள்* | *தண்டத்தொகை* |
|---|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* | *(4)* *ரூபாய்.* |
| 47 | ..... | மேம்பாட்டுத் திட்டத்திற்கு இணங்கிய வகையில் நிலத்தைப் பயன்படுத்த மற்றும் மேம்படுத்தத் தவறுதல். | 7,500 |
| 48 | ..... | அனுமதியின்றி கட்டிடத்தை எழுப்புதல் அல்லது நிலத்தின் பயன்பாட்டை மாற்றுதல் | 10,000 |
| 49 | ..... | அனுமதிக்காக விண்ணப்பிக்க மற்றும் அனுமதி பெறத் தவறுதல். | 5,000 |
| 56 | (5) | அதிகாரமளிக்கப்படாத மேம்பாட்டை அகற்றக் கோருவதற்கான அதிகாரம். | 5,000 |
| 57 | ..... | அதிகாரமளிக்கப்படாத மேம்பாட்டினை நிறுத்துவதற்கான அதிகாரம். | 5,000 |
| 62 | ... | மேம்பாட்டுக் கட்டணங்களைச் செலுத்துவதற்கு இணங்கத் தவறுதல். | 10,000 |
| 106 | .... | அரசுப் பணியாளர்களால் அல்லது திட்ட அதிகார அமைப்புகளின் பணியாளர்களால் நுழைவதற்கான அதிகாரம் செலுத்தப் படுவதற்குத் தடை செய்தல். | 10,000 |

தமிழ்நாடு அவசரச் சட்டம் 6/2012. **11. (1)** 2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்—ஊரமைப்புத் (திருத்த) அவசரச் சட்டமானது இதன் மூலம் நீக்கம் செய்யப்படுகிறது. நீக்கமும் காப்பும்.

**(2)** அவ்வாறு நீக்கம் செய்யப்பட்டிருக்கின்ற போதிலும், மேற்சொன்ன அவசரச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டத்தின்படி செய்யப்பட்ட செயல் எதுவுமோ, அல்லது எடுக்கப்பட்ட நடவடிக்கை எதுவுமோ, இந்தச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டத்தின்படி செய்யப்பட்டதாகவோ அல்லது எடுக்கப்பட்டதாகவோ கொள்ளப்படுதல் வேண்டும்.

**நோக்க—காரண விளக்கவுரை.**

தமிழ்நாடு மாநிலம் முழுவதும் அதிகாரமளிக்கப்படாத மேம்பாடுகளைக் கட்டுப்படுத்துவதற்கான மற்றும் ஒழுங்குமுறைப்படுத்துவதற்கான தேவை தெளிவாக உணரப்பட்டு சில காலமாக அரசானது அக்கறை கொண்ட பொருட்பாடாக இது இருந்துள்ளது. 1971ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்—ஊரமைப்புச் சட்டத்தை (தமிழ்நாடு சட்டம் 35/1972) மறு ஆய்வு செய்வதற்கென இந்திய உச்ச நீதிமன்றத்தின் ஓய்வு பெற்ற நீதிபதி, நீதியரசர். திரு.எஸ்.மோகன் அவர்கள் தலைமையின் கீழ் அமைத்துருவாக்கப்பட்ட குழுவானது, திறம்பட்ட செயலாக்க நடவடிக்கையை எடுப்பதற்காகவும், 2007ஆம் ஆண்டு ஜுலைத் திங்கள் 1ஆம் நாளுக்கு முன்னர் செய்யப்பட்ட அதிகாரமளிக்கப்படாத மேம்பாடுகளைப் பொறுத்த அளவில் வரம்புக்குட்பட்ட தீர்வுக்கு வகை செய்வதற்காகவும் திருத்தங்களைச் செய்வதற்குக் கருத்துரை வழங்கியுள்ளது. இந்தத் தறுவாயில் அக்குழுவானது, அந்தச் சட்டத்தின் 57,83, 84, 85, 86, 88, 89 ஆகிய பிரிவுகளுக்குக் குறித்த சில திருத்தங்களை மேற்கொள்வதற்கும் அந்தச் சட்டத்தில் 113 - C எனும் புதிய பிரிவொன்றை அதன் கீழ் கருதப்பட்ட வழிகாட்டு மதிப்புகளுடன் புகுத்துவதற்கும், அந்தச் சட்டத்தின் Iஆம் இணைப்புப்பட்டியலில் குறித்துரைக்கப்பட்ட தண்டத்தொகையினை உயர்த்துவதற்கும் கருத்துரைத்துள்ளது. அதற்கிணங்கிய வகையில், அரசானது மேற்சொன்ன சட்டத்தை மேற்சொன்ன நோக்கத்திற்காகத் தக்கவாறு திருத்துவதென முடிவு செய்தது மற்றும் 2012ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்—ஊரமைப்புத்(திருத்த) அவசரச் சட்டமானது(தமிழ்நாடு அவசரச் சட்டம் 6/2012) 2012—ஆம் ஆண்டு ஜுலைத் திங்கள் 16 ஆம் நாளன்று ஆளுநரால் பிறப்பிக்கப்பட்டு மற்றும் அது 2012ஆம் ஆண்டு ஜுலைத் திங்கள் 16 ஆம் தேதியிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** சிறப்பிதழில் வெளியிடப்பட்டது.

2. இந்தச் சட்டமுன்வடிவு மேற்சொன்ன அவசரச் சட்டத்திற்குப் பதிலாக அமைய விழைகிறது.

**ஆர். வைத்திலிங்கம்,**
*வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்.*

**சட்டமியற்று அதிகார ஒப்படைவு பற்றிய குறிப்பு.**

இந்தச் சட்டமுன்வடிவின் 9ஆம் கூறினால் புகுத்தப்படுவதற்குக் கருதப்படும் 1971ஆம் ஆண்டு நகர்–ஊரமைப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 113–C எனும் புதிய பிரிவானது, அதில் குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களுக்காக வழி காட்டு நெறிமுறைகளைச் செய்வதற்கும் வசூலிக்கப்படவேண்டிய தொகையினை வகுத்துரைக்கும் விதிகளைச் செய்வதற்கும் அரசுக்கு அதிகாரமளிக்கிறது.

2. ஒப்படைவு செய்யப்பட்ட அதிகாரங்கள் இயல்பானவையேயன்றி தனித்தன்மை வாய்ந்தவையல்ல.

அ.மு.பி. ஜமாலுதீன்,
*செயலாளர்.*

**2012ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 1ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130ஆம் விதியின் கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.**

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 47/2012.**

**1928ஆம் ஆண்டு அண்ணாமலைப் பல்கலைக்கழகச் சட்டத்தை மேலும் திருத்துவதற்கானதொரு சட்டமுன் வடிவு.**

இந்தியக் குடியரசின் அறுபத்து மூன்றாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

**1.** இந்தச் சட்டம், 2012ஆம் ஆண்டு அண்ணாமலைப் பல்கலைக் கழக (திருத்தச்) சட்டம் என வழங்கப் பெறும். **குறுந்தலைப்பு.**

**தமிழ்நாடு சட்டம் I/1929.**

**2.** (இதன் பின்பு, இதில் முதன்மைச் சட்டம் எனக் குறிப்பிடப்படுவதான) 1928—ஆம் ஆண்டு அண்ணாமலைப் பல்கலைக்கழகச் சட்டத்தின், 3ஆம் பிரிவில், **3—ஆம் பிரிவிற்கான திருத்தம்.**

*(a)* எனும் கூறுக்குப் பின்பு, பின்வரும் கூறுகள் புகுத்தப்படுதல் வேண்டும், அவையாவன:—

"*(aa)* 1985ஆம் ஆண்டு இந்திரா காந்தி தேசிய திறந்த வெளி பல்கலைக்கழகச் சட்டத்தின்படி (மையச் சட்டம் 50/1985) செய்யப்பட்ட நிலைமுறை விதிகளின்படி அமைத்துருவாக்கப்பட்ட தொலைவழிக் கல்வி மன்றத்தின் நிலை ஆணைகளுக்கும் பணிப்புரைகளுக்கும் இணங்கிய வகையில், தொலைவழிக் கல்வி முறைமை மூலம், குறித்த காலப் படிப்புபிரிவுகளை வழங்குவதற்கும்;

*(aaa)* 1956ஆம் ஆண்டு பல்கலைக்கழக மானிய ஆணையச் சட்டத்தின்படி (மையச் சட்டம் 3/1956) செய்யப்பட்ட ஒழுங்குமுறை விதிகளுக்கு இணங்கிய வகையில் இந்தியாவின் பகுதி எதிலுமோ அல்லது இந்தியாவிற்கு வெளியேயோ படிப்பு மையங்களை அமைத்துருவாக்குவதற்கும் பேணிவருவதற்கும்.".

**3.** முதன்மைச் சட்டத்தின் 4ஆம் பிரிவில், (2) ஆம் உட்பிரிவிற்குப் பின்பு, பின்வரும் உட்பிரிவானது சேர்க்கப்படுதல் வேண்டும், அதாவது:— **4ஆம் பிரிவிற்கான திருத்தம்.**

"(3) (1) ஆம் உட்பிரிவில் என்ன அடங்கியிருந்தபோதிலும், பல்கலைக்கழகமானது, 1956 ஆம் ஆண்டு பல்கலைக்கழக மானிய ஆணையச் சட்டத்தின்படி (மையச் சட்டம் 3/1956) செய்யப்பட்ட ஒழுங்குமுறை விதிகளுக்கு இணங்கிய வகையில், இந்தியாவின் பகுதி எதிலுமோ அல்லது இந்தியாவிற்கு வெளியேயோ, படிப்பு மையங்களை அமைத்துருவாக்கலாம் மற்றும் பேணி வரலாம்.".

**நோக்க–காரண விளக்கவுரை**

தொலைவழிக் கல்வி மன்றத்தினால் வழங்கப்பட்டுள்ள வழி காட்டு நெறிமுறைகளின்படி தொலை வழிக்கல்வி நிறுவனங்களைத் தொடங்குவதற்குக் கருதுகிற அல்லது ஏற்கெனவே தொலை வழிக் கல்வி நிறுவனங்களைத் தொடங்கியுள்ள முதன்மைக் கல்வி நிறுவனமானது அதன் சட்டத்தில் அல்லது உடன்பாட்டுக் குறிப்பில் தொலைவழிக் கல்வித்திட்டத்தை நடத்துவதற்கான வகைமுறையைக் கொண்டிருத்தல் வேண்டும்; மற்றும் அத்தகைய வகைமுறையானது அவற்றிற்கான சட்டத்தில் இல்லாமல் ஏற்கெனவே தொலைவழிக் கல்வி நிறுவனங்களைத் தொடங்கியுள்ள பல்கலைக்கழகங்கள், அவற்றின் சட்டத்தை அந்த அளவுக்குத் திருத்தம் செய்தல் வேண்டும்.

2. 2003 ஆம் ஆண்டு பல்கலைக்கழக மானிய ஆணைய (தனியார் பல்கலைக்கழகங்களில் தரநிலைகளை அமைத்துருவாக்குதல் மற்றும் பேணி வருதல்) ஒழுங்குமுறை விதிகளின் பத்தி 33–இல் மாநிலச் சட்டமொன்றின்படி அமைத்துருவாக்கப்படும் தனியார் பல்கலைக்கழகமொன்று, வழக்கமாகத் தொடர்புடைய மாநிலத்தின் எல்லைக்குள் செயலாற்றுதல் வேண்டும்; மற்றும் பிரதான வளாகத்தின் மேம்பாட்டிற்குப் பின்னர், விலக்களிக்கப்பட்ட சூழ்நிலைகளில் அப்பல்கலைக்கழகமானது அது செயற்பாட்டிற்கு வந்ததிலிருந்து ஐந்து ஆண்டுகளுக்குப்பின்பு அதன் வளாகத்திற்குள் அல்லாத மையங்கள்; அதன் எல்லைக்குள் அல்லாத வளாகங்கள் மற்றும் படிப்புமையங்களைப் பிற நிபந்தனைகளுக்குட்பட்டு அதாவது, வளாகத்திற்குள் அல்லாத மையம் அல்லது படிப்பு மையம் பல்கலைக்கழக மானிய ஆணையத்தின் முன் ஏற்பிசைவுடனும் மற்றும் அந்த படிப்பு மையம் தொடங்கப்படுவதற்குக் கருதப்பட்ட மாநில அரசின் ஏற்பிசைவுடனும் அமைக்கப்படுதல் வேண்டும்.

3. 1928ஆம் ஆண்டு அண்ணாமலைப் பல்கலைக்கழகச் சட்டத்தில் (தமிழ்நாடு சட்டம் I/1929), தொலைவழிக் கல்வி முறை மூலம் குறித்தகாலப் படிப்புப் பிரிவுகளை வழங்குவதற்கும் இந்தியாவின் பகுதி எதிலுமோ அல்லது இந்தியாவிற்கு வெளியேயோ படிப்பு மையங்களை அமைத்துருவாக்குவதற்கும் பேணி வருவதற்கும் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தை இயல்விக்கும் வகைமுறை எதுவும் அடங்கியிருக்கவில்லை. பல்கலைக்கழக மானிய ஆணையத்தினால் செய்யப்பட்ட மேற்சொன்ன பல்கலைக்கழக மானிய ஆணையத்தால் செய்யப்பட்ட ஒழுங்குமுறை விதிகளையும் தொலைவழிக் கல்வி மன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட வழிகாட்டு நெறிமுறைகளையும் கருத்தில் கொண்டு அரசானது, தொலைவழிக் கல்வி முறைமை மூலம் குறித்தகால படிப்புப் பிரிவுகளை வழங்குவதற்கும் இந்தியாவின் பகுதி எதிலுமோ அல்லது இந்தியாவிற்கு வெளியேயோ படிப்பு மையத்தை அமைத்துருவாக்குவதற்கும் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தை இயல்விக்கும் வகையில் மேற்சொன்ன சட்டத்தை திருத்துவதென முடிவு செய்துள்ளது.

4. இச்சட்டமுன்வடிவு மேற்சொன்ன முடிவிற்குச் செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

**பி. பழனியப்பன்,**
*உயர்கல்வித் துறை அமைச்சர்.*

அ.மு.பி. ஜமாலுதீன்,
*செயலாளர்.*

**2012ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 1—ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130—ஆம் விதியின் கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.**

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 48/2012.**

**1983ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தை மேலும் திருத்துவதற்கானதொரு சட்டமுன்வடிவு.**

இந்தியக் குடியரசின் அறுபத்து மூன்றாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

குறுந்தலைப்பும் தொடக்கமும்.

1.(1) இந்தச் சட்டம், 2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (மூன்றாம் திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது, 2012 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 3 ஆம் நாளன்று நடைமுறைக்கு வந்துவிட்டிருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 30/1983.

21ஆம் பிரிவிற்கான திருத்தம்.

2. (இதன்பின்பு இதில் முதன்மைச் சட்டம் எனக்குறிப்பிடப்படுவதான) 1983ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின், 21ஆம் பிரிவில், (2) ஆம் உட்பிரிவில், (i) எனும் கூறில்,—

(a) ''குழுமத்தினால்'' எனும் சொற்றொடருக்குப்பின்பு, ''அல்லது குழுமம் இல்லாதவிடத்து பொதுக்குழுவினால்'' என்னும் சொற்றொடரானது புகுத்தப்படுதல் வேண்டும்;

(b) முதலாம் வரம்புரையில், ''குழுமம்'' எனும் சொல்லுக்குப்பின்பு அது வருகிற இரண்டு இடங்களில், ''அல்லது நேர்விற்கேற்ப பொதுக்குழு'' என்னும் சொற்றொடரானது புகுத்தப்படுதல் வேண்டும்;

(c) இரண்டாம் வரம்புரையில், ''குழுமம்'' எனும் சொல்லுக்குப்பின்பு ''அல்லது நேர்விற்கேற்ப பொதுக்குழு'' என்னும் சொற்றொடரானது புகுத்தப்படுதல் வேண்டும்;

தமிழ்நாடு அவசரச் சட்டம் 14/2012.

நீக்கமும் காப்பும்.

3. (1) 2012ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (மூன்றாம் திருத்த) அவசரச் சட்டமானது இதன் மூலம் நீக்கம் செய்யப்படுகிறது.

(2) அவ்வாறு நீக்கம் செய்யப்பட்டிருக்கின்றபோதிலும், மேற்சொன்ன அவசரச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான முதன்மை சட்டத்தின்படி செய்யப்பட்ட செயல் எதுவுமோ அல்லது எடுக்கப்பட்ட நடவடிக்கை எதுவுமோ, இந்த சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான முதன்மை சட்டத்தின்படி செய்யப்பட்டதாகவோ அல்லது எடுக்கப்பட்டதாகவோ கொள்ளப்படுதல் வேண்டும்.

**நோக்க – காரண விளக்கவுரை.**

1983ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின்படி (தமிழ்நாடு சட்டம் 30/1983) பதிவு பெற்ற சங்கம் ஒன்றின் இயக்குநர் குழுமமானது, சங்கத்தின் உறுப்பினராகச் சேர்த்துக்கொள்வதற்குத் தகுதிவாய்ந்த தனிநபர் எவரையும் சங்கத்தின் உறுப்பினர் ஒருவராக அனுமதிப்பதற்கு அதிகாரம் பெற்று விளங்கும். தற்போது பதிவு பெற்ற சங்கத்தின் அலுவல்களைத் தனி அலுவலர்கள் மேலாண்மை செய்து வருகின்றனர். கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினர் ஒருவராக சேர்த்துக் கொள்வதற்குத் தகுதி வாய்ந்த தனிநபர் எவரையும் அனுமதிப்பதற்கு 30/1983 எனும் எண்ணிட்ட மேற்சொன்ன தமிழ்நாடு சட்டத்தில் திட்டவட்டமான வகைமுறை ஒன்றைச் செய்ததன் மூலம் தனி அலுவலர்கள் அதிகாரமளிக்கப்பட்டிருந்தபோது, சென்னை உயர்நீதிமன்றத்தின் முழு ஆயமானது கே. நித்தியானந்தம் – எதிர் – தமிழ்நாடு மாநிலம் மற்றும் பிறர் (2006-1-L.W.363) எனும் வழக்கில் பின்வரும் கருத்துரையை வழங்கி மேற்சொன்ன வகைமுறையானது தன்னிச்சையானது, காரணமற்றது, அதிகார வரம்பு மீறியது மற்றும் அரசியலமைப்புக்கு எதிரானது என விளம்பியுள்ளது:-

“மேற்சொன்ன கலந்தாய்வின் அடிப்படையில், புதிய உறுப்பினர்களைப் பதிவு செய்வதற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ள பொதுக்குழுவின் தெரிவுக்குழுமத்தின் மூலமாக பொதுக்குழுவினால் செய்யப்படும் மக்களாட்சி அமைப்பிலான மேலாண்மை வழியில் செயல்படுவதற்கு கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்துருவாக்கப்பட்டுள்ளன என இந்நீதிமன்றமானது கருதுகிறது”.

மேற்சொன்ன கருத்தின் அடிப்படையில் கடந்த 11 ஆண்டுகளாக புதிய உறுப்பினர்களை கூட்டுவுச் சங்கங்களில் சேர்க்க முடியாமல் இருந்தது.

2. அரசமைப்பின் 43–B எனும் உறுப்பும் IX-B எனும் பகுதியும் கூட்டுறவுச் சங்கங்களைப் பொறுத்த அளவில் அவை தன்னிச்சையாக அமைதல், தனித்து இயங்கும் செயல்பாடு, மக்களாட்சி வழியிலான கட்டுப்பாடு, தொழில்முறை மேலாண்மை ஆகியன, அமைய அரசானது முயற்சி செய்து அவற்றை மேம்படுத்துதல் வேண்டும் எனக் கருதுகிறது. அரசமைப்பின் வகைமுறைகளுக்கு இயைந்த வகையில் கூட்டுறவுச் சங்கங்களின் மக்களாட்சி அமைப்பிலான செயல்பாட்டிற்கு வழிவகுக்கும் பொருட்டு அரசானது, சங்கத்தின் உறுப்பினர் ஒருவராக சேர்த்துக் கொள்வதற்குத் தகுதிவாய்ந்த தனி நபர் எவரையும் அனுமதிப்பதற்குக் கூட்டுறவுச் சங்கங்களின் பொதுக்குழுவிற்கு அதிகாரம் வழங்குவதன் மூலம், கூட்டுறவுச் சங்கங்களின் புதிய உறுப்பினர்களைச் சேர்த்துக் கொள்வதற்கு அனுமதிப்பதெனக் கருதியுள்ளது; மற்றும் மேற்சொன்ன நோக்கத்திற்காக, 30/1983 எனும் எண்ணிட்ட தமிழ்நாடு சட்டத்தைத் தக்கவாறு திருத்துவதென முடிவு செய்தது. அதற்கிணங்கிய வகையில், 2012–ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (மூன்றாம் திருத்த) அவசரச் சட்டமானது (தமிழ்நாடு அவசரச் சட்டம் 14/2012) 2012 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 3ஆம் நாளன்று ஆளுநரால் பிறப்பிக்கப்பட்டு மற்றும் அது, 2012 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 3ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** சிறப்பிதழில் வெளியிடப்பட்டது.

3. இந்தச் சட்டமுன்வடிவு மேற்சொன்ன அவசரச் சட்டத்திற்குப் பதிலாக அமைய விழைகிறது.

**செல்லூர் கே. ராஜூ,**
*கூட்டுறவுத் துறை அமைச்சர்.*

அ.மு.பி. ஜமாலுதீன்,
*செயலாளர்.*

**2012ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 1ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க காரண விளக்கவுரையுடன் சேர்ந்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130ஆம் விதியின் கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.**

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 49/2012.**

**1983ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்கள் சட்டத்தை மேலும் திருத்துவதற்கானதொரு சட்டமுன்வடிவு.**

இந்தியக் குடியரசின் அறுபத்து மூன்றாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப்பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

1. (1) இந்தச் சட்டம், 2012ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (நான்காம் திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும். குறுந்தலைப்பும் தொடக்கமும்.

(2) இது, 2012ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 6—ஆம் நாளன்று நடைமுறைக்கு வந்துவிட்டிருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 30/1983. 2. 1983ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் 33—ஆம் பிரிவிற்குப் பின்பு, பின்வரும் பிரிவானது புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:— 33—A—எனும் புதிய பிரிவு புகுத்தப்படுதல்.

**“33—A. தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவுச் சங்கங்களுக்கான தேர்தல் ஆணையம்.—** (1) கூட்டுறவுச் சங்கம் ஒன்றின் தேர்தல்கள் அனைத்திற்குமான வாக்காளர் பட்டியல்களை தயாரிப்பதை மற்றும் தேர்தல்கள் அனைத்தையும் நடத்துவதைக் கண்காணிப்பு செய்வதும், அதற்கான பணிப்புரை வழங்குவதும் அவற்றைக் கட்டுப்பாடு செய்வதும், தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையர் ஒருவரை உள்ளடக்கிய தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களுக்கான தேர்தல் ஆணையத்திடம் உற்றடைதல் வேண்டும்.

(2) தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையரானவர் அரசால் நியமனம் செய்யப்படுதல் வேண்டும்.

(3) நபரெவரும், அரசுச் செயலாளர் படிநிலைக்குக் குறையாத அரசு அலுவலராக இருக்கின்றவராக அல்லது இருந்து வருகின்றவராக இருந்தாலன்றி, அவர் தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையராக நியமனம் செய்யப்படுவதற்குத் தகுதியுடையவராதல் கூடாது.

(4) தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையரானவர், தாம் பதவியேற்ற நாளிலிருந்து ஐந்து ஆண்டுகளைக் கொண்டதொரு கால அளவுக்குப் பதவி வகித்தல் வேண்டும்.

**வரம்புரை:** ஆனால், தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு சங்கங்களின் தேர்தல் ஆணையராக நியமனம் செய்யப்படும் நபரொருவர், தன்னுடைய பதவிக்காலத்தின்போது தமது அறுபத்தைந்தாவது வயதை நிறைவெய்துவாராயின், அவர்தம் பதவியிலிருந்து ஓய்வு பெறுதல் வேண்டும்.

(5) (3)ஆம் உட்பிரிவின் வகைமுறைக்கு உட்பட்டு தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையருக்கான பணி நிபந்தனைகள் வகுத்துரைக்கப்படக்கூடியவாறானதாக இருத்தல் வேண்டும்.

(6) அராசனது, (1)ஆம் உட்பிரிவின்படி தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவுச் சங்கங்களுக்கான தேர்தல் ஆணையத்திடம் வழங்கப்படும் அலுவற்பணிகளை ஆற்றுவதற்காக, தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவுச் சங்கங்களுக்கான தேர்தல் ஆணையத்திற்குத் தேவைப்படக்கூடியவாறான அத்தகைய பணியாளர்கள் இருப்பதற்கு ஆவன செய்யலாம்.”.

தமிழ்நாடு அவசரச் சட்டம் 17/2012. 3. (1) 2012ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (நான்காம் திருத்த) அவசரச் சட்டமானது இதன் மூலம் நீக்கம் செய்யப்படுகிறது. நீக்கமும் காப்பும்

(2) அவ்வாறு நீக்கம் செய்யப்பட்டிருக்கின்றபோதிலும், மேற்சொன்ன அவசரச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டத்தின்படி செய்யப்பட்ட செயல் எதுவுமோ, அல்லது எடுக்கப்பட்ட நடவடிக்கை எதுவுமோ, இந்தச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டத்தின்படி செய்யப்பட்டதாகவோ அல்லது எடுக்கப்பட்டதாகவோ கொள்ளப்படுதல் வேண்டும்.

**நோக்க—காரண விளக்கவுரை.**

2011ஆம் ஆண்டு அரசமைப்பு (தொண்ணூற்று ஏழாம் திருத்தச்) சட்டத்தினால் புகுத்தப்பட்டவாறான இந்திய அரசமைப்புச் சட்டத்தின் IXB எனும் பகுதியில், 243 ZK எனும் உறுப்பின் (2)ஆம் கூறின்படி, கூட்டுறவுச் சங்கமொன்றின் தேர்தல்கள் அனைத்திற்குமான வாக்காளர் பட்டியல்களை தயாரிப்பதையும் தேர்தல்கள் அனைத்தையும் நடத்துவதையும் கண்காணிப்பு செய்வது, அவற்றுக்குப் பணிப்புரை வழங்குவது, அவற்றைக் கட்டுப்பாடு செய்வது ஆகியன மாநிலமொன்றின் சட்டமன்றத்தினால் சட்டத்தின் வாயிலாக வகைசெய்யப்படக்கூடியவாறான அத்தகைய அதிகார அமைப்பு அல்லது குழுமத்திடம் உற்றடைந்திருக்கும்.

2. அரசானது, இந்த மாநிலத்தில் உள்ள கூட்டுறவுச் சங்கங்கள் அனைத்திற்கும் சுதந்திரமான மற்றும் நியாயமான முறையில் தேர்தல்களை நடத்துவதற்கு, 1983ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தமிழ்நாடு சட்டம் 30/1983) சட்டத்தை இந்த நோக்கத்திற்குத் தக்கவாறு திருத்துவதன் மூலம், தனியாக கூட்டுறவுச் சங்கங்களுக்கான தேர்தல் ஆணையமொன்றை அமைத்துருவாக்குவதற்கு முடிவு செய்தது. அதற்கிணங்கிய வகையில், 2012ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (நான்காம் திருத்த) அவசரச் சட்டமானது (தமிழ்நாடு அவசர சட்டம் 17/2012) 2012ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 6ஆம் நாளன்று ஆளுநரால் பிறப்பிக்கப்பட்டு மற்றும் அது, 2012ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 6ஆம் தேதியிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** சிறப்பிதழில் வெளியிடப்பட்டது.

3. இந்தச் சட்டமுன்வடிவு மேற்சொன்ன அவசரச் சட்டத்திற்குப் பதிலாக அமைய விழைகிறது.

**செல்லூர் கே. ராஜு,**
*கூட்டுறவுத் துறை அமைச்சர்.*

**நிதிபற்றிய குறிப்பு.**

இச்சட்டமுன்வடிவு சட்டமாக இயற்றப்படும்போது இம்மாநிலத் தொகுநிதியத்திலிருந்து செலவு செய்ய நேரிடும்.

2. எனினும் இச்சட்டமுன்வடிவின் வகைமுறைகளுக்குச் செயல்வடிவம் கொடுப்பதில் ஏற்படக்கூடிய செலவு இவ்வளவு என்பதை எந்தக் கோணத்திலும் துல்லியமாக இந்தக் கட்டத்தில் மதிப்பிட்டுக் கூற இயலாது.

**செல்லூர் கே. ராஜு,**
*கூட்டுறவுத் துறை அமைச்சர்.*

**சட்டமியற்று அதிகார ஒப்படைவு பற்றிய குறிப்பு.**

இச்சட்டமுன்வடிவின் 2ஆம் கூறினால் புகுத்தப்பட கருதப்படும் 1983ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 30/1983) 33–A எனும் பிரிவானது, தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு சங்கங்களுக்கான தேர்தல் ஆணையரின் பணிபற்றிய நிபந்தனைகளை வகுத்துரைப்பதற்கான விதிகளைச் செய்வதற்கு அரசுக்கு அதிகாரமளிக்கிறது.

2. ஒப்படைவு செய்யப்பட்ட அதிகாரங்கள் இயல்பானவையேயன்றி தனித்தன்மை வாய்ந்தவையல்ல.

**செல்லூர் கே.ராஜு,**
*கூட்டுறவுத் துறை அமைச்சர்.*

அ.மு.பி. ஜமாலுதீன்,
*செயலாளர்.*

**2012–ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 1–ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130–ஆம் விதியின் கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.**

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 50/2012.**

**1983ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தை மேலும் திருத்துவதற்கானதொரு சட்டமுன்வடிவு.**

இந்தியக் குடியரசின் அறுபத்து மூன்றாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:-

குறுந்தலைப்பும் தொடக்கமும்.

**1. (1)** இந்தச் சட்டம், 2012ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (ஐந்தாம் திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது, உடனடியாக நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 30/1983.

89–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**2.** 1983ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் 89ஆம் பிரிவில், (1)–ஆம் உட்பிரிவிற்கான வரம்புரையில், "பதினோராண்டுகள் ஆறு மாதங்கள்" என்று வருகின்ற சொற்றொடருக்குப் பதிலாக "பதினோராண்டுகள் எட்டு மாதங்கள் இருபது நாள்கள்" எனும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்.

**நோக்க – காரண விளக்கவுரை.**

தொடக்கநிலைக் கூட்டுறவுச் சங்கங்களைப் பொறுத்த அளவில் 2001ஆம் ஆண்டு மே திங்கள் 25ஆம் நாளிலிருந்தும், மைய மற்றும் உச்சநிலைக் கூட்டுறவுச் சங்கங்களைப் பொறுத்த அளவில் 2001ஆம் ஆண்டு மே திங்கள் 26ஆம் நாளிலிருந்தும் ஓராண்டுக் காலஅளவிற்கு 1983–ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 30/1983) 89–ஆம் பிரிவின் (1)ஆம் உட்பிரிவின்கீழ் தனி அலுவலர்கள் நியமிக்கப்பட்டனர். மேற்சொன்ன கால அளவிற்குள்ளாக மேற்சொன்ன கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல்களை நடத்த இயலவில்லையாதலால், மேற்சொன்ன சட்டத்தைத் திருத்தியதன் மூலம் மேற்சொன்ன பிரிவின் கீழ் நியமிக்கப்பட்ட தனி அலுவலர்களின் பதவிக்கால அளவானது 2012ஆம் ஆண்டு மே திங்கள் 24ஆம் நாளுக்கும் அப்பால் மேலும் ஆறு மாதங்களைக் கொண்ட ஒரு கால அளவிற்குக் கடைசியாக நீட்டிக்கப்பட்டது. அவர்களின் நியமனக் கால அளவானது தொடக்க நிலைக் கூட்டுறவுச் சங்கங்களைப் பொறுத்த அளவில் 2012ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 24ஆம் நாளன்றும், மைய மற்றும் உச்சநிலைக் கூட்டுறவுச் சங்கங்களைப் பொறுத்த அளவில் 2012ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 25–ஆம் நாளன்றும் முடிவடைவதாக இருந்தது.

2. கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேர்தல் நடத்துவதற்காக அரசினால் ஏற்பளிக்கப்பட்டவாறான கால அட்டவணையின்படி முதல் கட்டத்தில் முதல் இரண்டு நிலைகளுக்காக தேர்தல்கள் முறையே, 2007ஆம் ஆண்டு சூலைத் திங்கள் 7ஆம் நாளன்றும், 2007ஆம் ஆண்டு சூலைத் திங்கள் 11ஆம் நாளன்றும் நடத்தப்பட்டன. இந்தத் தேர்தல்களின்போது நடைபெற்ற ஒரு சில நிகழ்வுகள் அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டன. இந்த நிகழ்ச்சிகள் இம்மாநிலத்திலுள்ள கூட்டுறவுச் சங்கங்களுக்கான தேர்தல்களை நடத்தும் அடிப்படை நோக்கத்தையே தகர்ப்பதாக அரசு கருதுகிறது. எனவே அரசானது, கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல்களை அவை எங்கெங்கெல்லாம் நடைபெற்றனவோ, அங்கெங்கெல்லாம் நீக்கம் செய்வதெனவும் அனைத்துக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் புதிய தேர்தல்களை நடத்துவதெனவும் முடிவு செய்து அதற்கிணங்கிய வகையில் ஆணையிட்டுள்ளது. புதிய தேர்தல்களுக்கான புதிய தேர்தல் கால அட்டவணை ஒன்று உரிய முறையில் அரசினால் அறிவிக்கப்படும்.

3. மேற்சொன்ன பொருட்பாட்டின் காரணமாக, தொடக்கநிலைக் கூட்டுறவுச் சங்கங்களுக்கான தேர்தல்களை 2012ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 24ஆம் நாளன்றோ அல்லது அதற்கு முன்னரோ நடத்த இயலவில்லை. அனைத்துத் தொடக்க நிலைக் கூட்டுறவுச் சங்கங்களிலும் தேர்ந்தெடுக்கப்பட்ட குழுமங்கள் அமைத்துருவாக்கப்பட்ட பின்னர் மட்டுமே மைய மற்றும் உச்சநிலைக் கூட்டுறவுச் சங்கங்களுக்கான தேர்தல்களை நடத்தவியலும். எனவே அரசானது, அந்நோக்கத்திற்காக மேற்சொன்ன சட்டத்தைத் தக்கவாறு திருத்துவதன்மூலம் தொடக்கநிலை கூட்டுறவுச் சங்கங்களைப் பொறுத்த அளவில் 2012ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 24ஆம் நாளுக்கு அப்பாலும், மைய மற்றும் உச்சநிலை கூட்டுறவுச் சங்கங்களைப் பொறுத்த அளவில் 2012ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 25ஆம் தேதிக்கு அப்பாலும் மேலும் இரண்டு மாதங்கள் மற்றும் இருபது நாள்களைக் கொண்டதொரு கால அளவிற்கு மேற்சொன்ன கூட்டுறவுச் சங்கங்களின் தனி அலுவலர்களின் பதவிக்காலத்தை நீட்டிப்பதென முடிவு செய்தது.

4. இச்சட்டமுன்வடிவு மேற்சொன்ன முடிவிற்குச் செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

**செல்லூர் கே. ராஜு,**
*கூட்டுறவுத் துறை அமைச்சர்.*

அ.மு.பி. ஜமாலுதீன்,
*செயலாளர்.*

**2012ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 1ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க காரண விளக்கவுரையுடன் சேர்ந்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130—ஆம் விதியின் கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.**

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 51/2012.**

## 1989—ஆம் ஆண்டு தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகச் சட்டத்தை மேலும் திருத்துவதற்கானதொரு சட்டமுன்வடிவு.

இந்தியக் குடியரசின் அறுபத்து மூன்றாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

குறுந்தலைப்பும் தொடக்கமும்.

1. (1) இந்தச் சட்டம், 2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக (இரண்டாம் திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது, 2012ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 31ஆம் நாளன்று நடைமுறைக்கு வந்துவிட்டிருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 42/1989.

11—ஆம் பிரிவிற்கான திருத்தம்.

2. (இதன்பின்பு இதில் முதன்மைச் சட்டம் எனக் குறிப்பிடப்படுவதான) 1989ஆம் ஆண்டு தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகச் சட்டத்தின் 11ஆம் பிரிவில், (3)—ஆம் உட்பிரிவிற்கான மூன்றாம் வரம்புரையில், ''அறுபத்தைந்து ஆண்டுகள்'' எனும் சொற்றொடருக்குப் பதிலாக, ''எழுபது ஆண்டுகள்'' என்னும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்.

தமிழ்நாடு அவசரச் சட்டம் 9/2012.

நீக்கமும் காப்பும்.

3. (1) 2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக (இரண்டாம் திருத்த) அவசரச் சட்டமானது இதன் மூலம் நீக்கம் செய்யப்படுகிறது.

(2) அவ்வாறு நீக்கம் செய்யப்பட்டிருக்கின்றபோதிலும், மேற்சொன்ன அவசரச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டத்தின்படி செய்யப்பட்ட செயல் எதுவுமோ, அல்லது எடுக்கப்பட்ட நடவடிக்கை எதுவுமோ, இந்தச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டத்தின்படி செய்யப்பட்டதாகவோ அல்லது எடுக்கப்பட்டதாகவோ கொள்ளப்படுதல் வேண்டும்.

## நோக்க– காரண விளக்கவுரை.

1989–ஆம் ஆண்டு தமிழ்நாடு தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகச் சட்டத்தின்படி (தமிழ்நாடு சட்டம் 42/1989), தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தரானவர், அறுபத்தைந்து வயது வரையில் பதவி வகித்தல் வேண்டும். அரசானது, கல்வியாளர்கள் பெறும் அறிவானது கால்நடை மருத்துவ அறிவியலில் கல்வியை வளம்பெறச் செய்வதற்காகப் பயன்படுத்தப்படுவதற்கு இயல்விக்கும் வகையில், துணைவேந்தரின் ஓய்வு பெறும் வயதினை, 2009ஆம் ஆண்டு மையப் பல்கலைக்கழகங்கள் சட்டத்தில் (மையச் சட்டம் 25/2009) உள்ளவாறான துணைவேந்தரின் ஓய்வு பெறும் வயதிற்கு இணையாக அமையும் வகையில், அறுபத்தைந்து வயதிலிருந்து எழுபது வயதாக உயர்த்தும் பொருட்டு, மேற்சொன்ன 42/1989 எனும் எண்ணிட்ட தமிழ்நாடு சட்டத்தைத் திருத்துவதென முடிவு செய்தது.

2. அதற்கிணங்கிய வகையில் 2012–ஆம் ஆண்டு தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக(இரண்டாம் திருத்த) அவசரச் சட்டமானது (தமிழ்நாடு அவசரச் சட்டம் 9/2012) 2012ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 30ஆம் நாளன்று ஆளுநரால் பிறப்பிக்கப்பட்டு, அது 2012ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 31ஆம் தேதியிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** சிறப்பிதழில் வெளியிடப்பட்டது.

3. இச்சட்டமுன்வடிவு மேற்சொன்ன அவசரச் சட்டத்திற்குப் பதிலாக அமைய விழைகிறது.

**டி.கே.எம். சின்னய்யா,**
*கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர்.*

அ.மு.பி. ஜமாலுதீன்,
*செயலாளர்.*

**2012ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 1–ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130–ஆம் விதியின் கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.**

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 52/2012.**

## 2012ஆம் ஆண்டு தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகச் சட்டத்தை திருத்துவதற்கானதொரு சட்டமுன்வடிவு.

இந்தியக் குடியரசின் அறுபத்து மூன்றாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:-

**1.** (1) இந்தச் சட்டம், 2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும். குறுந்தலைப்பும் தொடக்கமும்.

(2) இது, 2012ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 31ஆம் நாளன்று நடைமுறைக்கு வந்துவிட்டிருப்பதாகக்கொள்ளப்படுதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 21/2012.

**2.** (இதன்பின்பு இதில் முதன்மைச் சட்டம் எனக் குறிப்பிடப்படுவதான) 2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகச் சட்டத்தின் 11ஆம் பிரிவில், (3)ஆம் உட்பிரிவில் வரம்புரைக்குப் பின்பு, பின்வரும் வரம்புரையானது சேர்க்கப்படுதல் வேண்டும். அதாவது:- 11ஆம் பிரிவிற்கான திருத்தம்.

***"இரண்டாம் வரம்புரை:—*** மேலும், துணைவேந்தராக நியமிக்கப்படும் நபர் ஒருவர் அவரது பதவிக்காலத்தின் போது எழுபது வயதினை நிறைவெய்துவாரானால், தனது பதவியிலிருந்து அவர் ஓய்வு பெறுதல் வேண்டும்.".

**3.** முதன்மைச் சட்டத்தின் 49ஆம் பிரிவிற்கான வரம்புரையில், "அறுபத்தைந்து ஆண்டுகள்" எனும் சொற்றொடருக்குப் பதிலாக, "எழுபது ஆண்டுகள்" என்னும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும். 49–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

தமிழ்நாடு அவசரச் சட்டம் 10/2012.

**4.** (1) 2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழக (திருத்த) அவசரச் சட்டமானது இதன் மூலம் நீக்கம் செய்யப்படுகிறது. நீக்கமும் காப்பும்.

(2) அவ்வாறு நீக்கம் செய்யப்பட்டிருக்கின்றபோதிலும், மேற்சொன்ன அவசரச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டத்தின்படி செய்யப்பட்ட செயல் எதுவுமோ, அல்லது எடுக்கப்பட்ட நடவடிக்கை எதுவுமோ, இந்தச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டத்தின்படி செய்யப்பட்டதாகவோ அல்லது எடுக்கப்பட்டதாகவோ கொள்ளப்படுதல் வேண்டும்.

**நோக்க—காரண விளக்கவுரை**

2012ஆம் ஆண்டு தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகச் சட்டத்தில் (தமிழ்நாடு சட்டம் 21/2012), துணைவேந்தரின் பதவியை வகிப்பதற்கான பெரும அளவு வயது வரம்பைக் குறித்துரைக்கின்ற வகைமுறை எதுவும் இல்லை. கல்வியாளர்கள் பெறும் அறிவானது இம்மாநிலத்தில் மீன்வள அறிவியலில் கற்பதையும் ஆராய்ச்சியைத் தொடர்வதையும் மேம்படுத்துவதற்காகப் பயன்படுத்தப்படுவதற்கு இயல்விக்கும் வகையில் துணைவேந்தரின் ஒய்வு பெறும் வயதினை, 2009—ஆம் ஆண்டு மையப் பல்கலைக்கழகங்கள் சட்டத்தின்படி (மையச் சட்டம் 25/2009) உள்ளவாறான துணைவேந்தரின் ஓய்வு பெறும் வயதிற்கு இணையாகக் குறித்துரைப்பதற்குக் கருதப்பட்டுள்ளது. அதற்கிணங்கிய வகையில் அரசானது, முதல் துணைவேந்தர் உள்ளடங்கலாக துணைவேந்தரின் ஓய்வு பெறும் வயதை எழுபது வயதாக குறித்துரைப்பதற்கு, மேற்சொன்ன 21/2012 எனும் எண்ணிட்ட தமிழ்நாடு சட்டத்தைத் திருத்துவதென முடிவு செய்தது. அதற்கிணங்கிய வகையில் 2012ஆம் ஆண்டு தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழக (திருத்த) அவசரச் சட்டமானது (தமிழ்நாடு அவசரச் சட்டம் 10/2012) 2012ஆம் ஆண்டு ஜுலைத் திங்கள் 31ஆம் நாளன்று ஆளுநரால் பிறப்பிக்கப்பட்டு, அது 2012ஆம் ஆண்டு ஜுலைத் திங்கள் 31ஆம் தேதியிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** சிறப்பிதழில் வெளியிடப்பட்டது.

2. இச்சட்டமுன்வடிவு மேற்சொன்ன அவசரச்சட்டத்திற்குப் பதிலாக அமைய விழைகிறது.

**கே.ஏ. ஜெயபால்,**
*மீன்வளத் துறை அமைச்சர்.*

அ.மு.பி. ஜமாலுதீன்,
*செயலாளர்.*

**2012ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 1ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130ஆம் விதியின் கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.**

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 53/2012.**

**1982ஆம் ஆண்டு தமிழ்ப் பல்கலைக்கழகச் சட்டத்தை மேலும் திருத்துவதற்கானதொரு சட்டமுன்வடிவு.**

இந்தியக் குடியரசின் அறுபத்து மூன்றாம் ஆண்டில் தமிழ்நாடு சட்டமன்றப்பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:-

குறுந்தலைப்பும் தொடக்கமும்.

1. (1) இந்தச் சட்டம், 2012ஆம் ஆண்டு தமிழ்ப் பல்கலைக்கழகத் (திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும்

(2) இது, 2012ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 2ஆம் நாளன்று நடைமுறைக்கு வந்துவிட்டிருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 9/1982.

12ஆம் பிரிவிற்கான திருத்தம்.

2. (இதன்பின்பு இதில் முதன்மைச் சட்டம் எனக்குறிப்பிடப்படுவதான) 1982ஆம் ஆண்டு தமிழ்ப் பல்கலைக்கழகச் சட்டத்தின் 12 ஆம் பிரிவில், (3)ஆம் உட்பிரிவிற்கான மூன்றாம் வரம்புரையில், "அறுபத்தைந்து ஆண்டுகள்" எனும் சொற்றொடருக்குப் பதிலாக, "எழுபது ஆண்டுகள்" என்னும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்.

தமிழ்நாடு அவசரச் சட்டம் 12/2012.

நீக்கமும் காப்பும்.

3. (1) 2012ஆம் ஆண்டு தமிழ்ப் பல்கலைக்கழகத் (திருத்த) அவசரச் சட்டமானது இதன் மூலம் நீக்கம் செய்யப்படுகிறது.

(2) அவ்வாறு நீக்கம் செய்யப்பட்டிருக்கின்றபோதிலும், மேற்சொன்ன அவசரத் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டத்தின்படி செய்யப்பட்ட செயல் எதுவுமோ, அல்லது எடுக்கப்பட்ட நடவடிக்கை எதுவுமோ, இந்தச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டத்தின்படி செய்யப்பட்டதாகவோ அல்லது எடுக்கப்பட்டதாகவோ கொள்ளப்படுதல் வேண்டும்.

## நோக்க – காரண விளக்கவுரை.

தற்போது தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தரின் பதவியை வகிப்பதற்கான பெரும அளவு வயது வரம்பானது அறுபத்தைந்து ஆகும். கல்வியாளர் பெற்றுள்ள அறிவும் அனுபவமும் தமிழ் மொழி மற்றும் இலக்கியத்தை வளம்பெறச் செய்திடப் பயன்படும் வகையில் துணைவேந்தரின் ஒய்வு பெறும் வயதை உயர்த்துவதற்குக் கருதப்பட்டது.

2. அரசானது துணைவேந்தரின் ஒய்வு பெறும் வயதினை, 2009ஆம் ஆண்டு மையப் பல்கலைக்கழகங்கள் சட்டத்தின்படி (மையச் சட்டம் 25/2009) உள்ளவாறான துணைவேந்தரின் ஒய்வு பெறும் வயதிற்கு இணையாக அமையும் வகையில் அறுபத்தைந்திலிருந்து எழுபது வயதாக உயர்த்துவதற்கு, மேற்சொன்ன 1982–ஆம் ஆண்டு தமிழ்ப் பல்கலைக்கழகச் சட்டத்தை (தமிழ்நாடு சட்டம் 9/1982) திருத்துவதென முடிவு செய்தது. அதற்கிணங்கிய வகையில் 2012ஆம் ஆண்டு தமிழ்ப் பல்கலைக்கழக (திருத்த) அவசரச் சட்டமானது (தமிழ்நாடு அவசரச் சட்டம் 12/2012) 2012 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 30ஆம் நாளன்று ஆளுநரால் பிறப்பிக்கப்பட்டு மற்றும் அது 2012 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 2ஆம் தேதியிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** சிறப்பிதழில் வெளியிடப்பட்டது.

3. இந்தச் சட்டமுன்வடிவு மேற்சொன்ன அவசரச் சட்டத்திற்குப் பதிலாக அமைய விழைகிறது.

**என்.ஆர். சிவபதி,**
*பள்ளிக்கல்வி, விளையாட்டுகள் (ம) இளைஞர் நலன்,*
*சட்டம், நீதிமன்றங்கள் மற்றும்*
*சிறைச்சாலைகள் துறை அமைச்சர்.*

அ.மு.பி. ஜமாலுதீன்,
*செயலாளர்.*

**2012ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 1ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க காரண விளக்கவுரையுடன் சேர்ந்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130ஆம் விதியின் கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.**

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 54/2012.**

**1987ஆம் ஆண்டு தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவப் பல்கலைக்கழகம் சென்னை சட்டத்தினை மேலும் திருத்துவதற்கானதொரு சட்டமுன்வடிவு.**

இந்தியக் குடியரசின் அறுபத்து மூன்றாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப்பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

குறுந்தலைப்பும் தொடக்கமும்.

**1.** (1) இந்தச் சட்டம் 2012ஆம் ஆண்டு தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவப் பல்கலைக்கழகம் சென்னை (திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது, 2012ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 6–ஆம் நாளன்று நடைமுறைக்கு வந்துவிட்டிருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 37/1987.

10ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**2.** (இதன்பின்பு இதில் முதன்மைச் சட்டம் எனக்குறிப்பிடப்படுவதான) 1987ஆம் ஆண்டு தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகம் சென்னை சட்டத்தின் 10ஆம் பிரிவில் (3)ஆம் உட்பிரிவிற்கான வரம்புரையில், ‘‘அறுபத்தைந்து ஆண்டுகள்’’ எனும் சொற்றொடருக்குப் பதிலாக, ‘‘எழுபது ஆண்டுகள்’’ என்னும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்.

தமிழ்நாடு அவசரச் சட்டம் 15/2012.

நீக்கமும் காப்பும்.

**3.** (1) 2012ஆம் ஆண்டு தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகம் சென்னை (திருத்த) அவசரச் சட்டமானது இதன் மூலம் நீக்கம் செய்யப்படுகிறது.

(2) அவ்வாறு நீக்கம் செய்யப்பட்டிருக்கின்றபோதிலும், மேற்சொன்ன அவசரச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டத்தின்படி செய்யப்பட்ட செயல் எதுவுமோ, அல்லது எடுக்கப்பட்ட நடவடிக்கை எதுவுமோ, இந்தச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டத்தின்படி செய்யப்பட்டதாகவோ அல்லது எடுக்கப்பட்டதாகவோ கொள்ளப்படுதல் வேண்டும்.

**நோக்க – காரண விளக்கவுரை.**

தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவப் பல்கலைக்கழகத் துணைவேந்தரின் பதவியை வகிப்பதற்கான பெரும அளவு வயது வரம்பானது அறுபத்தைந்து ஆகும். மருத்துவத் தொழிலாற்றுநர்கள் பெறும் அறிவும் அனுபவமும் இம்மாநிலத்தில் மருத்துவக் கல்வியை வளம்பெறச் செய்வதற்காகப் பயன்படுத்தப்படுவதற்கு இயல்விக்கும் வகையில், தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவப் பல்கலைக்கழகம் சென்னை துணைவேந்தரின் பதவியை வகிப்பதற்கான பெருமளவு வயது வரம்பினை உயர்த்துவது குறித்துப் பரிசீலனை செய்யப்பட்டது. அரசானது தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பதவியை வகிப்பதற்கான பெரும அளவு வயது வரம்பை, 2009ஆம் ஆண்டு மையப் பல்கலைக்கழகங்கள் சட்டத்தின்படி (மையச் சட்டம் 25/2009) உள்ளவாறான துணைவேந்தரின் ஒய்வு பெறும் வயதிற்கு இணையாக அமையும் வகையில் அறுபத்தைந்திலிருந்து எழுபது வயதாக உயர்த்துவதற்கு, 1987ஆம் ஆண்டு தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகம் சென்னை சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 37/1987) 10(3) எனும் பிரிவைத் திருத்துவதென முடிவு செய்தது. அதற்கிணங்கிய வகையில், 2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவப் பல்கலைக்கழகம் சென்னை(திருத்த) அவசரச் சட்டமானது (தமிழ்நாடு அவசரச் சட்டம் 15/2012) 2012 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 30ஆம் நாளன்று ஆளுநரால் பிறப்பிக்கப்பட்டு அது, 2012 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 6ஆம் தேதியிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** சிறப்பிதழில் வெளியிடப்பட்டது.

2. இந்தச் சட்டமுன்வடிவு மேற்சொன்ன அவசரச் சட்டத்திற்குப் பதிலாக அமைய விழைகிறது.

**மரு. வி.எஸ். விஜய்,**
*மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.*

அ.மு.பி. ஜமாலுதீன்,
*செயலாளர்.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.